# தொழிலாளி

இலங்கை தொழிலாளர் வர்க்கத்தின் ஒரே வார இதழ்

மலர் 2 | இதழ் 41 | ஜூன் 13, 1964 | பக்கங்கள் 8 | விலை சதம் 10


# சமசமாஜ புதிய மந்திரி

# பிற்போக்கு பஸ் நிர்வாகிகள் பக்கம்!

## வேரஹெரையில் 4000 தொழிலாளர் வேலைநிறுத்தம்

**ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி-சமசமாஜக் கட்சி கூட்டு அரசாங்க பரிபாலனத்தின் கீழ், தொழிலாளர்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையேயுள்ள சம்பந்தமென்ன?**

வேரஹெரை இ. போ. ச. வில் இவ்வாரம் நடைபெற்றுள்ள சம்பவங்களைப் பார்க்கும் போது, பழைய அரசாங்கம் தொழிலாளர்களுக்கு எதிராக நடத்திய கொள்கை தொடர்வது தெளிவாகியது. இதில் எவ்வித மாற்றமும் இல்லை.

குட்டி ஹிட்லர் வேஷம் பூண்டிருந்த தொழிலாளர் துரோகி மஹாநம சமரவீரா, தனது பரிபாலன காலத்தில் தொழிலாளர்களின் போராட்டங்களை நசுக்க பொலிஸையும், இராணுவத்தையும் உபயோகித்தது நாடறிந்த விஷயம். புதிய சமசமாஜ மந்திரி திருவாளர் அனில் முனசிங்காவும் இதே கொள்கையையே பின்பற்றுவது இவ்வாரம் வேரஹெரை தொழிலாளர்களுக்கு எதிராக பொலிஸ், இராணுவத்தைஉபயோகித்து தொழிலாளர்களை அவர் அடக்கி ஒடுக்க முற்பட்டதிலிருந்து தெளிவுறுகிறது.

வேரஹெரை வேலைநிறுத்தத்திற்கு பிற்போக்கு நிர்வாகத்தினரே காரணமாகும். இதுபற்றி கவனம் செலுத்தி, பிற்போக்காளர்களின் சதிகளை அறிந்து முடிவுகாண முயலாது, பழைய தொழிலாளர் விரோத கொள்கையையே புதிய சமசமாஜ மந்திரி பின்பற்றுகிறார்.

சமசமாஜ மந்திரியுடன், சமசமாஜ தொழிற் சங்கமும், முன்பு பின்பற்றிய கொள்கையை உதறித் தள்ளிவிட்டு, பிற்போக்கு இ. போ. ச. நிர்வாகத்தினரையும், அரசாங்கத்தையும் பாதுகாக்க முனைந்துள்ளது.


ஈழத்திருநாட்டு தொழிலாளி வர்க்கத்திற்கு சமசமாஜக் கட்சியும், கூட்டு அரசாங்கமும் கொடுக்கப்போகும் பேரிடிகளுக்கு இது ஒத்திகையாக அமைந்துள்ளது.

இவ்வாரம், இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கம், புதிய மந்திரிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், ''இலங்கைப் போக்குவரத்துச் சபையில் திறமையின்மையும், பெரும் ஊழல்களும் இன்று பரிபூரணமாக ஆட்சி செலுத்தி வருகின்றன. தேசியமயக் கொள்கைக்கு முற்றும் எதிரான, தொழிலாளர்களுடன் பழகவும், அவர்களின் அனுபவங்களை தெரிந்துகொள்ள முடியாத தொழிலாளர் விரோதக் கொள்கையைப் பின்பற்றும் படு பிற்போக்குக் கும்பலே இன்று நிர்வாகத்தைக் கொண்டு நடத்துகிறது. இவர்களின் பிரதான, முக்கிய நோக்கம் இன்று மக்கள் பகுதியாக உள்ள பஸ் தேசியமய சேவையை மீண்டும் தனிநபர்கள் வசம் ஒப்படைப்பதாகும். இந்த நிலை மாற்றப்படும் வரை, இச் சேவை சீரடையப் போவதில்லை. அதோடு, தொழிலாளர்களும் தமது போராட்டத்தை கைவிடுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.''

நிலைமை எப்படி இருந்த போதும், அரசாங்கத்திற்கு வெளியிலிருந்த போது இதே புதிய மந்திரி பின்பற்றிய கொள்கையும், மந்திரிப்பதவி ஏற்ற பின் அவர் அமுல்படுத்த முனைந்துள்ள கொள்கையும் எதிரும் புதிருமானது. அதோடு, பிற்போக்கு இ. போ. ச. நிர்வாகத்தினருக்கு ஆதரவாக புதிய மந்திரி தனது கொள்கையை மாற்றிக் கொண்டிருப்பதுடன், இன்று பிற்போக்காளரின் ஊழல்களை எதிர்த்துப் போராடும் இ. போ. ச. தொழிலாளர்களை மட்டம் தட்டவும் முன்வந்துள்ளது இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

கூட்டு அரசாங்கத்தில் சேர்வது சம்பந்தமாக சமசமாஜக் கட்சியினரால் முன் வைக்கப்பட்ட 10 நிபந்தனைகளில் ஒன்று, முற்போக்கு இயக்கத்திற்கு விரோதமாகவுள்ள பிற்போக்கு அதிகாரிகளைத் தொலைத்துக் கட்டுவதாகும். ஆனால், ஆட்சிக்கு வந்து முதலில் சமசமாஜ மந்திரி என்ன செய்துள்ளார்? முற்போக்கு இயக்கத்திற்கு எதிரான பிற்போக்கு நிர்வாகிகளை தொலைத்துக் கட்டுவதற்கு பதிலாக, அவர்களைப் பாதுகாத்து, தொழிலாளர்களைத் தொலைத்துக்கட்ட, தொழிலாளர்களின் முதல் போராட்டத்தையே நசுக்க முன்வந்தது மூலம் சமசமாஜ மந்திரி தனது உண்மைச் சுயரூபத்தைக் காட்டியுள்ளார்.

—8-ம் பக்கம் பார்க்க



எமது இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கத்தின் வேரஹெரைக் கிளையின் தலைவர் தோழர் கே. ஆர். வில்மன் வேலைநிறுத்தம் செய்துள்ள வேரஹெரைத் தொழிலாளர்கள் முன் உரை நிகழ்த்துகிறார்.

## ஏழு நாள் ஆட்சி

**தலையங்கம்**

கூட்டு அரசாங்கம் 7 நாட்களைக் கடந்துவிட்டது. இக் குறுகிய காலகட்டத்தில்—ஒரே வாரத்தில் இக் கூட்டு அரசாங்கத்திடமிருந்து அதிகமானவைகளை நாம் எதிர்பார்ப்பது தவறாகும். என்றாலும், இவ்வரசாங்கத்தால், மிகக் குறுகிய இவ் ஆரம்ப கட்டத்தில் செய்ய முடிந்தவைகளும், செய்ய முடியாதவைகளும் பல உண்டு.

எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரிக்க, தொழிற் சங்கங்களின் ஒத்துழைப்பைத் தேடுவது இதிலொன்றாகும். இதிலிருந்து நாம் தெரிவதென்ன? இந்தக் கொள்கை மூலம் கூட்டரசாங்கத்தினர், குறிப்பாக புதிய நிதிமந்திரி ஒரு பெரும் சதியை உருவாக்குகிறார்.

தொழிற் சங்கங்களின் ஒத்துழைப்பை நாடுவதாக, டாக்டர் என். எம். பெரேரா கூறுகிறாரெனில், அது, முற்போக்கு ஆலோசனைகளைத் தொழிலாளர்களிடமிருந்து பெற்று, இந்த பட்ஜட்டில் இணைப்பதற்கல்ல. அதற்கு மாறாக, செலவீனங்களை வெட்டிக் கொத்த தொழிலாளர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொண்டு, பின்னர் இந்த வெட்டுக் கொத்து மக்களைப் பாதிக்கும் போது, ''நான் என்ன செய்வது, தொழிலாளர்களாகிய நீங்களும் சேர்ந்துதானே இதை உருவாக்கினீர்கள்'' என்று தொழிலாளர்கள்மீது முழுப் பாரத்தையும் போட்டுத் தப்பித்துக்கொள்ள நடக்கும் சூழ்ச்சி இது.

எட்டுமணி வேலையை சரியாக செய்யுங்கள் என்று சமசமாஜ மந்திரிகள் வேண்டி நிற்பது மற்றுமொரு நிகழ்ச்சியாகும்.

தொழிலாளர்களின் 21 கோரிக்கைகள் பற்றி ஒன்மே பேசாமலும், தொழிலாளர்கள் தாம் வென்றெடுக்க உறுதிபூண்டுள்ளவைகள் பற்றி எவ்வித ஆர்வமும் காட்டாமல், தொழிலாளர்கள் தமது கோரிக்கைகளை முன்வைத்திருக்கும் இச் சந்தர்ப்பத்தில், சமசமாஜ புது மந்திரிகள் தம்மோடு ஒத்துழைக்க தொழிலாளர்களை வேண்டிக் கொள்வது, முதலாளிகள் ஆட்சியை முதலாளித்துவத்தை விட இவ் 'இடதுசாரித் தலைவர்கள்' சிறந்த முறையில் வளர்க்க முயன்று வருவது தெளிவுறுகிறது. தொழிலாளர்கள் தமது நன்மைக்காகவும், நாட்டின் முன்னேற்றத்திற்காகவும், தாம் விரும்பிய, தமது நலனைப் பேணிக் காக்கும் ஆட்சியின் கீழ் எட்டு மணி நேரமென்ன, நாள் பூராவும் வேலை செய்வார்கள்.

ஆனால், இதே டாக்டர் பெரேரா, சில மாதங்களுக்கு முன் கடுமையாகக் கண்டித்துத் தாக்கிய, நாட்டின் முன்னேற்றத்தில் எவ்வித அக்கறையும் காட்டாத, தொழிலாளி வர்க்கத் துரோக கட்சி என்று வர்ணிக்கப்பட்ட ஸ்ரீலங்கா ஆட்சியின் மூலமாக, மேற்கூறியவாறு தொழிலாளர்களுக்கு சமசமாஜ மந்திரிகள் வேண்டுகோள் விடுத்திருப்பது ''மாட்டுக்கு முன்னால் வண்டியை நிறுத்துவது'' போன்றதாகும்.

நாட்டின் முன்னேற்றத்திற்குத் துணைதரும் விதத்தில் ஏகாதிபத்திய விரோத நிலப்பிரபுத்துவ விரோதக் கொள்கையை எடுத்துச் செல்வது சம்பந்தமாகவும், நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவும் வழிவகைகளை எடுக்கும் பிரச்சினைகளிலும் ஜனநாயகத்தைவிரிவுபடுத்துவதற்கான நன் முயற்சிகள்பற்றியும் இன்னும் கூட்டுமந்திரிசபை தெளிவுபடுத்தவில்லை. மந்திரிசபை அங்கத்தவர்களின் அறிக்கைகளிலும் இதுவரை இவைபற்றி எதுவுமே நம்மால் காணமுடியால் இருக்கிறது. ஒருவேளை, இவைபற்றி சிம்மாசனப் பிரசங்கத்தில் பிரஸ்தாபம் இருக்கலாம். ஆனால், இவை வெறும் கண்துடைப்பாக இருக்குமே அன்றி; நடைமுறைக் கொள்கையாக இருக்காது.

# தொழிலாளர் துரோக நாடகத்தின் முதற் காட்சி

# போலித் தலைவர்கள் சரணாகதி

## புரட்சிகர இயக்கம் வளரும் வாகை சூடும்



தோழர் சண்முகதாசன்

**அண்மையில், யாழ்ப்பாண நகர மண்டபத்தில் தோழர் சணமுகதாசன் நிகழ்த்திய உரையின் சுருக்கத்தை இங்கு தந்துள்ளோம். 50 சத உள்நுழைவுக் கட்டணம் செலுத்தி 700-க்கு மேற்பட்ட மக்கள் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.**

## தோழர் சண்முகதாசன் உரை

இடதுசாரி ஐக்கிய முன்னணியை சின்னுபின்னப்படுத்திவிட்டு, தனது கட்சியைக் கேவலமாகப் பிளவுபடுத்திவிட்டு, தொழிலாளி வர்க்க இயக்கத்தின் அதிகப்படியானவர்களின் எண்ணங்களுக்கெதிராக முப்பது வருட தொழிலாளி வர்க்க சரித்திரத்தை குழிதோண்டிப் புதைத்துவிட்டு, முன்னையநாள் புரட்சிவாதியும், சமசமாஜத் தலைவருமான டாக்டர் என். எம். பெரேரா திருமதி சிறிமாவோ பண்டாரநாயகாவின் முதலாளித்துவ அரசாங்கத்தில் சரண்புகுந்துள்ளார். இவரது இந்தச் செயல் முதலாளி வர்க்கத்தின் புத்க்யுள்ள, கெட்டித்தனமான பகுதிகளுக்கும், தொழிலாளி வர்க்க இயக்கத்தின்சந்தர்ப்பவாதக் கும்பலுக்கும் மகிழ்ச்சி தருவதாகவும், வரவேற்கக் கூடியதாவும்ஒருபுறமிருக்க, இடதுசாரி இயக்கத்தின் நேர்மையான பகுதிகளுக்கு குழப்பமாக இருப்பதும் டாக்டர் பெரேராவும் அவரது கட்சியும், அண்மையில் கடைப்பிடித்த கொள்கைகளின் நேரடி விளைவேயாகும்.

டாக்டர் பெரேரா என்றுமே ஓர் மார்க்சிஸ வாதியாக இருந்தவரல்ல. அவர் கூறுவதில் பெருமைப்படுவதுபோல் அவர்ஹெறால்ட்லாஸ்கியிடமிருந்துதான் அரசியல் கற்றுரேயன்றி, கார்ல்மார்ஸ் இடமிருந்து அல்ல. அவர் ஓர் சிறந்த பிரித்தானிய சோஷலிஸ ஜனநாயக வாதியாக, பாராளுமன்ற போலி சம்பிரதாயங்களின் அசையாத நம்பிக்கை கொண்டவராகவே வளர்ந்தார். அவரது கட்சியும் வலதுசாரிசோஷலிஸ ஜனநாயகமும் இடதுசாரி தனிவழி தீவிர டிராட்ஸ்கிய வாதமும், ஒன்ருக இணைந்த, ஒரு நாணயத்தின் இரு பக்கங்களேயாகும்.

மார்க்சிஸத்தின் அடிப்படைக் கொள்கைளின் ஒன்ருன பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற கொள்கையை டாக்டர் பெரேராவின் கட்சி என்ருே கைவிட்டு விட்டது. இதிலிருந்து பாட்டாளி வர்க்கம் ஆட்சியைக் கைப்பற்றும் ஒரே மார்க்கம் பாராளுமன்ற மார்க்கம் என்ற கொள்கை இயற்கையானதே, தவிர்க்க முடியாததே. டாக்டர் பெரேராபோன்றதிறமைசாலியும், அறிவாளியுமான ஒருவரால், மற்றவர்களால் முடியாத போதிலும் நாட்டின் பிரச்சினைகளை தீர்க்க முடியும் என்றும், அதுவும் இன்றைய முதலாளித்துவ சமூக அமைப்பின் கீழ் சாதிக்க முடியும் என்று வாதிடுபவர்களும் உண்டு. இந்த வாதம் எழுவது உலகிற்கு முதல் முதல் கார்ல் மார்க்ஸ் எடுத்துக்காட்டியது போல், முதலாளித்துவத்தில் உள்ள முரண்பாடுகள் அதன் அழிவுக்குக் காரணம் அல்ல, அதன் குறைபாடு, முதலாளித்துவத்தை கெட்டித்தனமாகக் கொண்டு நடத்துவதற்கு டாக்டர் பெரேரா போன்ற மேதைகள் இல்லாதது தான் என்று வாதிடுவதற்குச் சமமானதாகும். இது உண்மையாளுல் உலகின் மூன்றிலொரு பாகத்தில் முதலாளித்துவம் ஒழிக்கப் பட்டிருக்க வேண்டியதில்லை. அந்த நாடுகளிலும் டாக்டர் பெரேரா போன்றவர்கள் இல்லாமலில்லை.

எமது நாட்டைச் சூழ்ந்துள்ள பொருளாதார நெருக்கடி, யூ. என். பி.யாலும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியாலும் தீர்க்கமுடியாமல் போனதிற்குக்காரணம்,எமது பொருளாளாதாரம் ஏகாதிபத்திய மூலதனத்திஞல், தொடர்ந்தும் சுரண்டப்பட்டு வருவதேயாகும். எமது தேசிய வருமானத்தின் 70% விகிதம் கிடைக்கக் கூடியதேயிலை,ரப்பர் தோட்டங்கள் அதிகமானவை,இன்னும் ஏகாதிபத்திய வாதிகளின் கையில்தான் இவை உள்ளன. ஏகாதிபத்தியத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் தொடர்புகளை அறுத்தெறிவதன் மூலம் மட்டுமே இலங்கையின் தேசிய பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிகாண முடியும். ஆனுல் கூட்டாட்சிக்கு அடிப்படையான 14 அம்சத் திட்டத்திலோ, அல்லது பதவி ஏற்ற டாக்டர் பெரேராவின் சகாக்களின் பிரகடனங்களிலோ,இதுபற்றி ஒன்றையும் காணவில்லை. மாருக, மூன்று சமசமாஜ மந்திரிகளும் எல்லாத் தொழிலாளர்களும் எட்டுமணி நேரம் ஒழுங்காக வேலை செய்யவேண்டும் என்ற முதலாளிகளின்பல்லவியையே வற்புறுத்துகின்றனர். சோஷலிஸவாதிகள் என்று தம்மை பெயர் சூட்டிக்கொள்பவர்கள் முதலாளிகளைவிடத் திறமாக முதலாளித்துவத்தை நடத்த முன்வருதன் பிரதிபலன் இதுவே. இதன் பயனுக இவர்கள் தொழிலாளி வர்க்கத்துடன் நேரடியாக மோத வேண்டி ஏற்படும். வேரஹெர தொழிற்சாலை ஏற்கெனவே ஓர் சமசமாஜ மந்திரியுடன் மோத முற்பட்டுள்ளது.

பெரிதும் பேசப்பட்ட இடதுசாரி ஐக்கிய முன்னணி இப்போது என்ன ஆயிற்று? கெனமன், விக்கிரமசிங்காவின் திரிபுவாதக் கும்பல், நாடு பூராவும் சென்று, இடதுசாரி ஐக்கிய முன்னணியை சீர்குலைப்பதாக எம்மைக் குற்றம் சாட்டினர். ஆனுல் இன்று நடந்ததென்ன? இடதுசாரி ஐக்கிய முன்னணியை சீர்குலைத்தவர் யார்? பிரேமலால் குமாரசிறியும், சண்முகதாசனுமா, அல்லது டாக்டர் என். எம். பெரேராவும், பிலிப்குணவர்த்தனுவுமா? இன்று திரிபுவாதிகளின் நிலை என்ன? இந்த நாட்டு அரசியல் வாழ்க்கையில் சிறிய பிரயோசனமற்ற கும்பலாக, தொழிற் சங்க இயக்கத்தில், எந்தவித செல்வாக்கும் இல்லாது, இடதுசாரி ஐக்கிய முன்னணியிலிருந்து உதைத்துத் தள்ளப்பட்டவர்களாய், எந்தக் கூட்டாட்சியிலும், எவராலும் வேண்டப்படாதவர்களாய், இத்திரிபுவாதக் கும்பல் பரிதாபத்திற் குரியவர்களாகிவிட்டனர். சென்ற வாரம், இவர்களின் அரசியல் கந்தைகளான பத்திரிகைகள். கூட்டாட்சிபற்றி எந்த அபிப்பிராயமும் கூருமல் வெளிவந்தது, இவர்களின் அரசியல் கொள்கை சூன்யத்தை அம்பலப்படுத்திற்று. இவர்கட்கு மிஞ்சி இருக்கும் ஒரே வழி அந்த பச்சை சந்தர்ப்பவாதி ஸ்டான்லி திலகரத்தினு(அவர் கட்சி அங்கத்தவரும் அல்ல) கூறியதுபோல் அழைத்தாலும், வெறுத்தாலும் கூட்டாட்சியை ஆதரிப்பதுவேயாகும். திரிபுவாதிகள் இன்று புதைந்துள்ள தவிர்க்க முடியாத நிலைமை இதுவே. மாருக, அரசியல் சம்பவங்கள் வெகு விரைவில், நாம் எதிர்பார்த்ததற்கும் முன்னதாக எமது அரசியல் தீர்க்கதரிசனங்களின் உண்மைகள் நிரூபணமாகியுள்ளன.

டாக்டர் என். எம். பெரேராவின் மந்திரிப்பதவி போராட்டமின்றி, கோரிக்கைகள் வெல்ல நினைக்கும் தொழிலாளி வர்க்க சந்தர்ப்ப வாதிகள் மத்தியில் குறிப்பாக தற்காலிகமாக ஒரு குழப்ப நிலையை உருவாக்கிவிடும். ஆனுல், யதார்த்த நிலை விரைவில் அவர்களையும்உண்மையை உணரவைக்கும். அப்போது அவர்கள் புதிய தலைமையின் கீழ் அணி திரட்டப் பழகிக் கொள்வர். புரட்சிகரமான, நேர்மையான சமசமாஜிகளும் விரைவில் டாக்டர் பெரேராவை கைவிடுவர். சோஷலிஸத்திற்கான நீண்ட, கடுமையான, கடினமான தொழிலாளி வர்க்கத்தின் பாதையில் சறுக்கி விழுந்த தலைவர்கள் பலர். சில மாதங்களில் டாக்டர் பெரேராவும் இப் பட்டியலில் சேர்க்கப்படுவார். ஆனுல் இயக்கம் தொடர்ந்து முன்னேறிச் செல்லும்.

# என். எம். பெரேராவும் மந்திரி சபையும் 'லட்சியக் கொள்கை' என்னவாயிற்று?

இம் மாதம் 11-ந் திகதி மத்தியானம் 1 மணி 28 நிமிஷத்தில், நல்ல ''சுபநேரத்தில்,'' புதிய மந்திரி சபை சத்திய பிரமாணம் செய்து பதவியேற்றது. புதிய மந்திரி சபையின் நிதிமந்திரியான திருவாளர் என். எம். பெரேரா அவர்கள், எடுத்த எடுப்பிலேயே விட்டிருக்கும் சில அறிக்கைகள் டிராட்ஸ்கிய அரசியல் தந்திரங்களையும் மீறி அவைகள் இங்கிலாந்து கன்ஷர்வெடிவ் பாணியில் அமைந்திருப்பது நமக்கு வியப்பைத் தரவில்லை.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ''லங்கா தீப'' பத்திரிகைக்குக் கொடுத்த ஒரு பேட்டியில் நிதி மந்திரி என். எம். பெரேரா அவர்கள், ''தொழிற் சங்கங்களின் மூலம் இலாகா அதிகாரிகளை வெறும் விமர்சனங்கள் செய்வதற்குப் பதிலாக, செயல் படுவதற்குரிய, பிரயோசனமான ஆலோசனைகளைக் கூறி உதவும் படி கேட்டுள்ளார்.'' மேலும், நிதி மந்திரியவர்கள் திருவாய் மலர்ந்துள்ளதாவது, பொருளாதார முன்னேற்றம் இலாகா அதிகாரிகளின் முயற்சியில்தான் தங்கியுள்ளது என்பதாகும்.

நிதி மந்திரி திரு. என். எம். பெரேரா அவர்கள் கடந்த30 வருடங்களாக இலங்கையின் அரசியல் வாழ்வில் சிறந்த முறையில் தொடர்பு கொண்டிருந்தவர்களில் ஒருவராகும். யூ. என். பி. ஆட்சிக் காலத்திலிருந்தே நடைமுறையிலிருந்துவந்த அடிமையாட்சி முறைகளையும், அதாவது இன்றைய காலனி ஆட்சி அமைப்பையும், நிர்வாக அதிகாரிகளின் தான்தோன்றித்தனமான அகங்கார மனுேபாவங்களையும் எதிர்த்து தொழிற் சங்கங்களும், முற்போக்கு எண்ணங்கொண்டவர்களும், கிளர்ச்சிகளும், போராட்டங்களும் நடத்தியுள்ளனர். இதை நிதி மந்திரியவர்கள் நன்ருய் அறிவார். அது மாத்திரமல்ல, அதிகாரிகளை எதிர்த்து தொழிற் சங்கங்கள் சில சமயங்களில் வேலை நிறுத்தப் போராட்டங்கள் கூட செய்துள்ளன.

1956ல் பண்டாரநாயகாவின் தலைமையில் ஏற்பட்ட சிறிய மாறுதல்களைக்கூட, சிறு சிறு முன்னேற்ற வேலைகளைக் கூட இந்த இலாகா அதிகாரிகள் தடைசெய்து நாசப்படுத்தி வந்த சம்பவங்களைப் பற்றி இந்நாட்டு மக்கள்நன்ருய்அறிவார்கள்.இவ்வளவு சீக்கிரத்தில் இதையாரும் மறந்துவிடவும் மாட்டார்கள்.

அடுத்து, மிகவும் சிறந்த பொருளாதாரநிபுணர் என்றும். அந்தத் துறையிலேயே நிபுணத்துவமும் பெற்றுள்ள திரு. என். எம். பெரேரா அவர்கள். பொருளாதார முன்னேற்றம் இலாகா அதிகாரிகளின் முயற்சியில்தான் தங்கியுள்ளது என்று கூறியுள்ளது, தேசிய இயற்கைச் செல்வங்களும், மனித உழைப்பும் இரண்டும் சேர்ந்தால்தான் தொழில்விருத்தியும் ,அத்துடன் பொருளாதார முன்னேற்றமும் ஏற்படும் என்கிற அடிப்படை பொருளாதார தத்துவக் கூற்றையே மறுத்துக் கூறுவதாகும்.

திரு. என். எம். பெரேரா அவர்கள் எப்பொழுதுமே இலங்கையின் அரசியல் சரித்திரத்தில் ஒரு புதிரான மனிதராகவே இருந்து வந்துள்ளார் என்பது முழுக்க முழுக்க உண்மை. கடந்த காலத்தில் முதலாளித்துவத்தின் சுகபோகத்திலும் சரஸ சல்லாபத்திலும், வெளிப்பகட்டிலும் திளைத்து சுகமனுபவித்துக் கொண்டே, மறுபுறத்தில் வறுமைப்பட்ட மக்களுக்கும்,அன்றன்ருடு வறுமைப்பட்டு துடிக்கும் தொழிலாளி மக்களுக்கு தலைவராகவும் நிதி மந்திரியவர்கள் கடந்த காலத்தில் இருந்துவந்தது உண்மையிலேயே சரித்திரப் பிரசித்தி பெற்ற சம்பவமேயாகும். இத்தகைய மாறுவேட ராஜ தந்திர நிகழ்ச்சிகளை யாருமே இலகுவில் செய்ய முடியாது. ஆகையினுல் தான் கூட்டு மந்திரி சபையில் இடம் பெற்றுள்ள திரு. என். எம். பெரேரா அவர்கள் மீண்டும் ஒரு முறை இலங்கையின் அரசியல் வாழ்வில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தப் போகிருர் என்பதை அவருடைய கடந்த கால கொழும்பு மேயர் வாழ்வை நினைவு கூறும்போது தெரிய வரும்.

முதலாளித்துவ அமைப்பின் கீழ் பகட்டான வெளிவேஷங்களுக்கும் பதவி வேட்டைக்காரர்களுக்கும் மக்களிடமிருந்து சரியான பாடங்கள் சில சமயங்களில் கிடைத்துவிடுகின்றன. திரு. என். எம். பெரேரா அவர்கள் கொழும்பு மேயராக இருந்த பொழுது, அன்றைய யூ. என். பி. க் கட்சியும், அரசாங்க நிர்வாகிகளும் செய்வதற்கு பயந்து பின்வாங்கிய சில ஏழை மக்களுக்கு விரோதமான நடவடிக்கைகளை எல்லாம் பாட்டாளிகளின் பாவலன் என்ற பெயரில் இயங்கிக்கொண்டிருந்த மேயர் திரு. என். எம். பெரேராவைக் கொண்டு செய்வதற்கு முயற்சிகள் செய்தனர். அன்று திரு. பெரேரா அவர்கள் மிகவும் சிறந்த முறையில் அதைச் செய்து முதலாளிகளிடமும், முதலாளித்துவ ஜனநாயக வாதிகளிடமும் நல்ல சபாஷ் வாங்கிக் கட்டினுர். அதன் பிறகு நடந்த நகரசபைத் தேர்தலில் சமசமாஜக் கட்சிக்கும், மேயர் என். எம். பெரேராவுக்கும் கொழும்பு மக்கள் மிகவும் சிறந்த பாடத்தைப் போதித்து அனுப்பினுர்கள் என்பதை திரு. என். எம். பெரேரா மறந்திருக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

வெறும் அலங்கார அடுக்கு மொழிகளும், சீர்திருத்தத் திட்டங்களும் இன்றைய சமுகத்திற்கு தேவையேயில்லை. நிர்வாக இயந்திரத்தை பொருளாதார

—7-ம் பக்கம் பார்க்க

# நவசீன மக்களின் தனிசிறந்த வாழ்வு

சீன மக்கள் குடியரசின் தேசிய மாதர் சங்க சம்மேளனத்தின் அழைப்பை ஏற்று இலங்கை முற்போக்கு மாதர் சங்கத்தின் சார்பில் சீனம் சென்ற திருமதி யசா டி. லெனரோல் (தலைவர்), திருமதி ஜனவதி ஹன்வெல, திருமதி சந்திரா சிறிபாகு ஆகியோரைக் கொண்ட தூது கோஷ்டி, ஒரு மாத சுற்றுப்பிரயாணத்தின் பின் இவ்வாரம் தாயகம் திரும்பியது. இத் தூது கோஷ்டியின் தலைவியாக விருந்த திருமதி லெனரோல் எழுதிய கட்டுரையை இங்கு பிரசுரித்துள்ளோம்.

## மாதர் தூதுகோஷ்டிக்கு மகத்தான வரவேற்பு

### சீனத்து மங்கையரின் போராட்ட வாழ்வுதரும் படிப்பினை

சீனத்தில் எங்கள் தூதுகோஷ்டி ஒருமாதகாலம் இருந்தது. அவ்வேளையில் சீனாவின் பல பாகங்களையும், பௌத்த ஸ்தலங்களையும், மற்றும் பிரபல ஸ்தானங்கள் பலவற்றையும் பார்வையிட்டோம். அத்துடன் சிறைச்சாலை, மிருகக் காட்சிசாலை, தொழில், விவசாயப் பொருட் காட்சிகள், நெசவுசாலை மற்றும் பெரும் தொழிற்சாலைகள் பலவற்றைப் பார்வையிட்டோம். பாடசாலைகள், தொழிலாளர் விடுதிகள், சுகாதார ஸ்தலங்க்ள் மற்றும் கலாச்சார விடுதிகள் பலவற்றிற்கும் சென்றோம்.

பீக்கிங் நகரில் நடந்த மே தின விழாவைப் பார்வையிடும் வாய்ப்பும் எமக்குக் கிட்டியது. ஒரு சோஷலிஸ நாட்டின் மகிழ்வுறு மக்களின் பிரதிபலிப்பாகத் திகழ்ந்தது மே தினம். ஊர்வலங்கள், பாட்டுகள், நடனங்கள், களியாட்டங்கள் நாடு பூராவும் விழாக் கோலம் பூண்டதாயிருந்தன.

### பூரித்தோம்

நாம் சென்ற இடங்களிலெல்லாம், மிக முக்கியமானதும் சரித்திரப் பிரசித்தி பெற்றதுமான சிங்கான்சென் மலைகள்-சீனாவின் முதல் புரட்சிகரத் தளங்கள் ஏற்படுத்தப்பட்ட-தோழர்கள் மா சே-துங், சூடே, சூ என்-லாய், லியு சோ-சி போன்றவர்கள் புரட்சிக்கான தயாரிப்பு வேலைகள் செய்த இடத்திற்குப் போகும் வாய்ப்புக் கிடைத்ததில் உண்மையில் நாம் மிகவும் பூரித்தோம். அதுமட்டுமல்ல, இலங்கையிலிருந்து இங்கு சென்ற முதல் தூதுக் குழு என்பதை நினைக்கும் போது மேலும் பெருமைப் பட்டோம்.

நாங்கள் சென்றவிடமெல்லாம் சீன மக்களின் வீரமிக்க சாதனைகளை எங்களால் காண முடிந்தது. தமது நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்காக அவர்கள் எடுக்கும் முயற்சிகள் போற்றுதற்குரியவை. நவீன கைத்தொழில், விஞ்ஞானம், இயந்திரம், உற்பத்திப் பொருள் ஆகியவை துரிதமான முன்னேற்றமடைந்து வருகின்றன.

### கம்யூன்

1959-1961 ஆகிய வருடங்களில் சீன மக்கள், இயற்கையின் சோதனைகளாலும், பிற்போக்கு வாதிகளினதும், ஏகாதிபத்திய வாதிகளினதும் சூழ்ச்சிகளினாலும் எண்ணரிய கஷ்டங்களுக்கு ஆளானார்கள். ஆனால், மக்கள் கம்யூன்கள் தந்த வெற்றியினால், இந்த நிலைமைகளை அவர்களால் சமாளிக்க முடிந்தது. ஆயிரக் கணக்கான கம்யூன் அங்கத்தவர்கள் ஓர் புதிய, முன்னேறிய சோஷலிஸ சமுதாயத்தைக் கட்டி வளர்க்கின்றனர் சந்தைகளில் குவிந்து கிடக்கும் உணவுப் பொருள்களும், ஏனைய அத்தியாவசியப்பொருட்களும் கம்யூன்களின் வெற்றியைப் பறைசாற்றுகின்றன. விவசாயத்தை அடிப்படையாக்கி தொழில் அபிவிருத்தியை வழிகாட்டியாக அமைக்கும் கொள்கை இங்கு வெற்றிபெறுவதை நாங்கள் கண்ணாரக்கண்டோம். கம்யூன் முறை உலகத்துக்குப் புது முறையாகும்; சீனம் இந்த முறையை வெற்றிகரமாக்கியுள்ளது. ஒரு கம்யூன் பரந்த பிரதேசத்தை தன்னுள் கொண்டதுடன், வயல்கள், தொழிற்சாலைகள், குழந்தை வளர்ப்பு இல்லங்கள், ஆரம்பப் பாடசாலைகள், கனிஷ்ட சிரேஷ்ட பாடசாலைகள், வைத்தியசாலைகள், விளையாட்டு மைதானங்கள் ஆகிய சகலவற்றையும் கொண்டதாயுமுள்ளது.

### சிறைச்சாலைகள்

கல்வித் திட்டத்தைப் பொறுத்தமட்டில் அறியாமை நீங்கியுள்ளது. வருங்கால சமுதாயத்தை சிருஷ்டி செய்வதில் அதிக கவனம் செலுத்தப்படுகின்றது. விஞ்ஞான, தொழிற் கல்விக்கு முதலிடம் கொடுக்கப்படுகின்றது.

சீனாவில், கொலை, கொள்ளை, கெட்ட நடத்தை ஆகியவை அழிந்து வருகின்றன. கலாச்சார வளர்ச்சி போற்றத்தக்க அளவில் முன்னேறியுள்ளது. நாங்கள் ஓர் சிறைச்சாலைக்குச் சென்றோம். மனித பிரச்சினைகளை அறிந்துகொள்ளும்ஓர் பள்ளிக்கூடமாக அது காட்சி அளித்தது. மனிதாபிமானத்துடன் அவர்களுக்குக் கல்வியும் தொழிலும் கற்பிக்கப்படுகின்றது. சிறைச்சாலைகள்

**திருமதி யசா டி லெனரோல்**

தண்டனை கொடுக்கும் கூடங்களாக இல்லாது, புது மனிதர்களைச் சிருஷ்டிக்கும் பாடசாலைகளாகவே அமைந்துள்ளன.

சீனாவில் தொழிலாளி வர்க்கம்தான் மிகவும் கொடுத்து வைத்தப்பகுதி. சகல வசதிகளும் உள்ளவீடுகள் அவர்களின் வேலைத்தலங்களுக்கு கருகாமையிலே உண்டு. பல சரக்குக் கடைகள், சந்தை, தபாற் கந்தோர், வங்கி, சினிமா படமாளிகை, விளையாட்டு மைதானம், ஓய்வுநேரப் பள்ளிக்கூடங்கள், சில இடங்களில் நீச்சல் குளங்கள் ஆகியவை அவர்களின் வீடுகளுக்கு அருகாமையிலேயே உள்ளன.

### சீனத்து மங்கையர்

தேசிய பொருளாதார அபிவிருத்தியில் சீனப் பெண்கள் பூரணமாகப் பங்கு கொள்கின்றனர். பள்ளிக்கூடம், தொழிற்சாலை, கம்யூன் அலுவலகம் அல்லது வைத்தியசாலை, எதுவானாலும் ஆண்களுடன் பெண்கள் சரிசமமாக உழைக்கின்றனர். சில பெண்கள், டைரக்டர்களாக, இஞ்சினியர்களாக, பொறி இயல் சிற்பிகளாக பணியாற்றுகின்றனர். தொழில் செய்யும் பெண்களின் குடும்பப் பொறுப்புகள் நன்கு கவனிக்கப்படுகின்றன. குழந்தைகட்கு பராமரிப்பு இல்லங்கள் உள்ளன. கர்ப்பிணிகளுக்கு விசேஷபாதுகாப்புகள் உண்டு. 56 நாள் முழு சம்பளத்துடன் லீவு, குழந்தை பிறந்த பின், 3-4 மணிவரை பாலூட்டுவதற்கான ஓய்வு, மற்றும் கர்ப்பவதிகளுக்கு ஒவ்வொரு நாளும் ஒரு மணி நேரம் அவசிய ஓய்வு ஆகியவையாகும். தொழில் செய்யும் பெண்கள், ஆண்களுடன் எல்லாவிதமான ஓய்வு நேர விளையாட்டுகளிலும் பங்கு கொள்கின்றனர்.

சோஷலிஸ வளர்ச்சியில், பெண்களின் பங்கைப் பூரணப்படுத்த தேசிய மாதர் சம்மேளனம் முக்கிய பங்கெடுத்துள்ளதை நாம் கண்டோம். இவர்கள் தமது பணியை, விடுதலைக்கு முன்னதாகவே தொடங்கி, இன்றும் செய்து வருகின்றனர். இது நன்றாகப் பிணைக்கப்பட்ட ஓர் பரந்த வெகுஜன ஸ்தாபனம். சரியான சித்தாந்த ரீதியான தலைமையை இது கொடுக்கிறது. இதிலிருந்து நாம் பல பாடங்களைக் கற்று அவற்றை எமக்கு வழிகாட்டியாகக் கொள்ளவேண்டும்.

### கடமை உணர்ச்சி

நவசீனா, தனது சிறந்த மக்கள் பலரின் வியர்வையாலும், இரத்தத்தாலும் கட்டி எழுப்பப்பட்டது. மாபெரும் சாதனைகளைச் செய்து உச்சத்தில் உயர்ந்துள்ளது. தான் விரும்பினால் தனது வளர்ச்சியில் திருப்தி அடைந்து சும்மா இருக்க அதனால் முடியும். ஆனால் ஒவ்வொரு சீனப் பிரஜையும் இன்னும் ஏதோ முக்கியமான அவசர அவசியமான கடமை தன்னைக் காத்திருக்கிறதென்ற உணர்வுடன் தயாராக இருக்கின்றான். சோஷலிஸ சமுதாயம் தொடர்ந்து முன்னேறுவது அவசியம். அதுபோல் புதிய பிரச்சினைகளையும் அது எதிர்நோக்கும். சீனா பரிபூரணமாக உலக சமாதானத்தையே விரும்புகிறது. அத்தோடு, மக்கள் யாராவது சுரண்டப்படும்வரை, ஏகாதிபத்தியம் எந்த ரூபத்திலாவது இருக்கும்வரை, விடுதலைப் போரை கைவிட முடியாது என்பதையும் நம்புகிறது. சகல ஆசிய-ஆபிரிக்க-லத்தீன் அமெரிக்க நாடுகளின் விடுதலை இயக்கங்களுக்கும் ஓர் ஒளிவிளக்காக, வழிகாட்டியாகத் திகழ்கிறது. இலங்கையிலிருந்து சென்ற நாங்கள் நேரடியாகப் புரிந்து கொண்ட ஓர் உண்மை, எமது சீன சகோதரிகள் தமது நாட்டின் விடுதலைக்காக ஆண்களுடன் தோளோடு தோள் நின்று போராடியுள்ளனர். இன்று தமது சோஷலிஸ வளர்ச்சிக்காக தொடர்ந்து உழைக்கின்றனர்.

எமது நாட்டிலுள்ள, விவசாய, தொழிலாள, மற்றும் பெண்மணிகள் தமது அரசியல் அறிவை சித்தாந்த ரீதியில் வளர்த்து, எமது நாட்டு ஆண்களுடன் தோளோடு தோள் நின்று ஒரு சோஷலிஸ இலங்கையைக் கட்டி வளர்க்க முன்வரவேண்டும். சீனாவில் நாங்கள் கற்ற பாடம் இதுவே. சீனாவிலிருந்து நாம் கொண்டு வரும் செய்தியும் இதுவேயாகும்.

---

## உழைப்பாளி

கருங்குயிலின் இசைஎனது காதுகளில்
கனிபிழிந்து கதைகள் பேசும்
சுரும்பினங்கள் பண்ணிசைத்துத் துன்பியலின்
இருட்குகையுட் சுடரை வீசும்
அரும்பின்இள முறுவலில்மெய் அருட்கவியின்
சுவைமணக்கும்; ஆயின் என்றும்
பருந்துநிழல் போல்உனது பரிதாப
நிலைநெஞ்சில் படர்ந்து செல்லும்.

பேனாஎடுத் தெழுதுகையில், தாள்காணில்
வானொலியில் பேசும் போது
சினவெடி ஓசைகளில், சேய்மையிலே
கடல்மீது செலும்க லத்தில்
வானூர்தி செல்லுகையில், வாகனங்கள்
யாவிலும்உன் வசனம் கேட்பேன்;
ஏன்எனது வாழ்வினிலே இருளகற்றும்
ஒளியின்னும் இல்லை? என்பாய்

மாளிகையின் சாளரங்கள் உன்குரலை
வழிமறித்து மதுவில் பொங்கும்
கேளிக்கை இசையினையே கேட்பதற்கு
வெளிப்படுத்தக் கேட்டுக் கேட்டுன்
வாழிடத்தில் அபஸ்வரத்தின் சோகஇருள்
மயக்கத்தில் வறுமை என்னும்
தாழியிலே தூங்குகின்றாய் எத்தனைநாள்
இதுஇன்னும் தொடர்ந்து செல்லும்?

-வே. கணேசன்.

---

## கட்டுநாயக்க தளத்தில் கண்ணோட்டம்

### கே. எம். பணிக்கரின் நூல் தரும் விபரம்

"சீனாவுக்கு மண்ணாசையும் ஆக்கிரமிப்பு வெறியும் தலைக்கேறிவிட்டன. நேற்று சும்மாவிருந்த இந்தியாவினுடைய எல்லையை அநியாயமாகத் தாக்கிப் பெரும் பிரதேசங்களைக் கைப்பற்றிக்கொண்டது. நல்லவேளையாக ஆங்கிலோ-அமெரிக்க அரசாங்கங்கள் உதவிக்கு முன்வந்தன. இல்லாவிடில் இந்திய உப-கண்டம் முழுவதையுமே சீனா இதுவரை கபளீகரம் செய்திருக்கும். ஆனாலும், சீனா இந்தியாவை ஆக்கிரமிக்கும் எண்ணத்தை முற்றாகக் கைவிடவில்லை. தக்க தருணம் பார்த்து, வேண்டிய ஆயுத்தங்கள் செய்துவருகிறது. இலங்கையில் உள்ள திருகோணமலை கடற்படைத் தளத்திலும் சீனா ஒரு கண் வைத்திருக்கிறது. இலங்கை அரசாங்கத்தோடு அதற்கான ஒரு ஒப்பந்தத்தைச் செய்து இரகசியமாக வைத்திருக்கிறது.''

இப்படியான ஒரு பொய்ப் பிரச்சாரத்தைக் கடந்த சில காலமாக இந்திய பிற்போக்கு முதலாளித்துவப் பத்திரிகைகள் இந்திய அரசாங்கத்தின் ஆதரவோடு இடையிடையே செய்து வருகின்றன. ஆங்கிலோ-அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளும், இலங்கையிலே உள்ள அவர்களது கையாட்களான தேசத் துரோக முதலாளித்துவக் கும்பலும் இந்தக் கட்டுக் கதைக்கு ஆமாம் போட்டு உயிர்கொடுத்து வருகின்றது.

இந்திய அரசியல் வட்டாரங்களிலே மிகவும் பிரசித்தி பெற்றவரான கே. எம். பணிக்கர் என்பவர் அண்மையில் திருகோணமலைக் கடற்படைத் தளத்தைப் பற்றியும், இந்து சமுத்திரத்தில் அது வகிக்கும் கேந்திர ஸ்தானம் பற்றியும் ஒரு தனி நூலை எழுதி வெளியிட்டார். அந்த நூலிலே அவர் இலங்கை இந்திய உப-கண்டத்துக்கு ஒரு மிதிகல்லு என்றும், அதுபற்றியே ஆங்கிலேயர் இந்தியாவை ஆண்ட காலம்வரை இலங்கையையும் வைத்திருந்தார்கள் என்றும் குறிப்பிட்டுவிட்டு, மேலும், 'திருகோணமலை கடற்படைத் தளம் இந்தியாவுக்கு இல்லாத வரையும் இந்தியாவினுடைய மற்ற பாதுகாப்பு ஏற்பாடுகள் எல்லாம் வெறும் பிரயோசனமற்றவையாகவே முடியும்' என்றுகுறிப்பிட்டுள்ளார்.

இதனுடைய பொருள் என்ன? எந்த விதத்திலும் இந்தியா, திருகோணமலை கடற்படைத் தளத்தைக் கைப்பற்ற வேண்டும் என்பதுதான். பணிக்கருடைய இந்த நூல் வெளியீட்டின் பின் இந்த எண்ணம் இந்திய முதலாளித்துவ பிற்போக்கு வாதிகளிடையே மிக வலுவும் செல்வாக்கும் பெற்று வருகிறது. இந்த ஆக்கிரமிப்பு எண்ணத்தை உள்ளூர வைத்துக்கொண்டுதான் இந்திய ஏகபோக முதலாளித்துவக் கும்பல் சீனாவைப் பூச்சாண்டி காட்டி இலங்கையினுடைய தலையிலே சிறுகச் சிறுக பழியைச் சுமத்துகிறது, ஓநாய் ஆட்டுக்குட்டியினுடைய தலையிலே பழி சுமத்தியதுபோல!

—சே. இராசா.

# சோஷலிசமும் - தொழிலாளி வர்க்கமும்

## இடதுசாரித் தலைவர்களின் வர்க்க சமரஸம்

கடந்த 30 ஆண்டு காலமாக சோஷலிஸம், வர்க்கப் போராட்டம், தொழிலாள வர்க்க சர்வாதிகாரம் பேசிய இடதுசாரித்தலைவர்கள் இன்று புதுப் பாட்டுப் பாட ஆரம்பித்துள்ளார்கள். வர்க்க சமரத்ஷதிற்கு வழிகோலும் இப் புதுப் போக்கின் பேராபத்தை கட்டுரை ஆசிரியர் இங்கு கூறியுள்ளார்

சோஷலிஸத்தைப் பற்றிப் பேசாத மேடைகளோ ஆட்சி மன்றங்களோ இன்று இல்லை. சோஷலிஸத்தின் ஜன்ம விரோதிகளும் சோஷலிஸத்தைப்பற்றி லேபல் போட வேண்டிய நிலைமைக்கு வந்துள்ளதால், பல வித வர்ண சோஷலிஸக் குரல்கள் எழுப்பப்படுகின்றன. நேரு சோஷலிஸம், நாசர் சோஷலிஸம், டட்லி சோஷலிஸம், ஸ்ரீலங்கா-சமசமாஜ சோஷலிஸம் இப்படிப் பல. இவற்றைப் பற்றியெல்லாம் விளக்க வேண்டிய அவசியமில்லை. இவர்கள் எப்படிப் பட்டவர்கள், எதற்காக இந்தக் கோஷங்களை முன்வைக்கிறார்கள் என்பது எமக்குத் தெரியும். இருந்தும், இதுவரை தொழிலாளி வர்க்கத் துணைவர்களாக-தலைவர்களாக நின்று, திரிபுவாதிகளாகவும், சீர்திருத்தவாதிகளாகவும் மாறிக்கொண்ட இடதுசாரி ஐக்கிய முன்னணித் தலைவர்கள் கூறும் சோஷலிஸத்தைப் பற்றி நாம் மௌனமாக இருப்பது பெரும் அபாயகரமானது.

### சோஷலிஸ மாயை

பாராளுமன்ற மூலம் பெரும்பான்மை எடுத்து இந்நாட்டில் சோஷலிஸ அமைப்பை ஏற்படுத்தலாம் என்ற மாயையிலிருந்தவர்கள் இன்னும் ஒருபடி மேலுக்குப் போய், முதலாளித்துவ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மந்திரி சபையில் ஒன்று இரண்டு மந்திரிப் பதவிகள் பெறுவதன் மூலம் இந்நாட்டில் சோஷலிஸத்தைக் கொண்டு வந்துவிடப் போவதாகவும், அதற்குத் தொழிலாள வர்க்கத்தை ஒத்துழைப்புத் தரும் படியும் வேண்டுகிறார்கள். வர்க்க சமரஸத்திற்கு நம்மை இழுத்துச் செல்லப்பார்க்கும் இவர்களின் வேண்டுகோள் சிரிப்பை உண்டாக்கத்தானே?

பரிதாபகரமான இந்த நிலைக்குள்ளான இந்தத் தலைவர்கள் வர்க்கப் போராட்டத்தையே மறந்துவிட்டார்கள். இராணுவம், போலிஸ், சிறை, நீதிமன்றங்கள் போன்ற உறுப்புக்களைக் கொண்ட ஆளும் வர்க்க இயந்திரமான அரசாங்கம் தமது வர்க்க நலனைக் காப்பாற்றி மக்களை அடக்குவதற்காக உபயோகப் படுத்தப் படுவதை உணராமல், அரசாங்கம் சமூகம் முழுமைக்கும் சொந்தம், அது அனைவரின் நலனுக்காகப் பணியாற்றுகிறதுஎன்றுஎண்ணுகிறார்கள்வர்க்கங்களிடையே நடந்து கொண்டிருக்கும் முரண்பாடுகளும் அதன் விளைவாக நடைபெறும் வர்க்கப் போராட்டமும் விஞ்ஞான சோஷலிஸத்தின் உயிர் நாடியாகும். வர்க்கப் போராட்டத்தின் மிகவும் பிரதானமான மூன்று அம்சங்களைப் பார்ப்போம்.

### மூன்று அம்சங்கள்

1. உற்பத்தி வளர்ச்சியில் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் தான் சமுதாயத்தில் வர்க்க வித்தியாசங்கள் ஏற்பட்டன. சமுதாயத்திலிருந்து தனியுடமை அழிக்கப்படும் பொழுது வர்க்கங்களும் அழிந்துவிடும்.

2. முதலாளித்துவ சமூக அமைப்பைத் தூக்கிஎறிந்து, சோஷலிஸசமூக அமைப்பை நிலை நிறுத்தும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பணியை நிறைவேற்ற புரட்சிக் குணமும் திறமையும் வாய்ந்த வர்க்கம் தொழிலாளி வர்க்கம் தான். அதன் தலைமைப்பாத்திரமும் முக்கியம்: வர்க்கப் போராட்டமே அதன் பாதை.

3. பெரும்பான்மையான உழைப்பாளி மக்களுக்கும் இதர பகுதியினருக்கும் பரிபூரண விடுதலை அளிக்கும் ஜனநாக அமைப்பான தொழிலாளி வர்க்க சர்வாதிகாரம், சமுதாயத்திலுள்ள வர்க்க வேற்றுமைகளை ஒழித்துக் கட்டி, வர்க்க வித்தியாசமில்லாத சோஷலிஸ சமூகத்தை அமைப்பதற்கான இடைக்கால அரசாங்க வடிவமாகும்.

### போராட்டப் பாதை

மேற் குறிப்பிட்ட விஷயங்களை நாம் ஆராய்ந்தால், சோஷலிஸத்தை அடைவதற்கு சோஷலிஸப் புரட்சி தேவை. சோஷலிஸப் புரட்சி பாட்டாளி வர்க்கத் தலைமையில், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துடன் தொடங்க வேண்டும். முதலாளி வர்க்கத்தின் பொருளாதார ஆதிக்கத்தை உடைத்தெறிய பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றியாக வேண்டும். முதலாளித்துவத்தோடு சமாதானம் செய்து கொள்வது மூலமோ அல்லது அதற்கு முட்டுக்கட்டை போடுவது மூலமோ சோஷலிஸத்தைஅடைய முடியாது. போராட்டப் பாதையில்தான் நிச்சயமாகச் செல்ல வேண்டும். இந்தப் போராட்டம் வர்க்கப் போராட்டமாக இருத்தல் வேண்டும். முதலாளித்துவ அரசு யந்திரத்தை உடைத்தெறிந்து அதன் இராணுவத்தையும், போலிசையும் துவம்சம் செய்வது மூலமே உண்டாக முடியும் என்பதும், சோஷலிஸ சமூக அமைப்பை ஏற்படுத்துவதற்கு முதலாளித்துவ றெடிமேட் அரசாங்க அமைப்பையும் பொருளாதார அமைப்பையும் அப்படியே இருக்க விட்டு சில நபர்களையும் மந்திரி சபைகளையும் மாற்றுவது அல்ல என்பதும் தெளிவு.

தொழிலாளர் அரசு தொழிலாள வர்க்க சர்வகாதிகாரம் என்பதால் வெருட்சி கொள்ளும் சிலரைத் திருப்திப்படுத்துவதற்காக அடிப்டைக்கொள்கைகளை விட்டுக் கேவலம் தொழிலாள வர்க்கத்தின் ஆதரவைப் பெற



**கே. ஏ. சுப்ரமண்யம்**

யாழ்-பிரதேச கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு வாலிபர் சங்க சம்மேளன பொதுச்செயலாளர்

''அதிகாரத்தைக் கைப்பற்றுதல்'' என்று புது மந்திரத்தைச் செபிக்கிறார்கள். இந்த ''அதிகாரத்கைக் கைப்பற்றுதல்'' என்ற மந்திரத்தை எப்படி விளக்குகிறார்கள் என்றால், மந்திரி சபையை மாற்றுவதாம்! வேடிக்கை: இந்த முதலாளித்துவ றெடிமேட் அரசாங்கத்தின் மந்திரி சபையில் டாக்டர் என். எம். பெரேராவும், பீட்டர் கெனமனும், பிலிப் குணவர்த்தனவும் சேர்ந்துகொண்டால் எல்லாம் சரியாம்.

### வழிகாட்டும் வர்க்கம்

சோஷலிஸப் போராட்டத்திற்கு தொழிலாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரத்தை இவர்கள் பொருட்படுத்தவில்லை. அதன் அவசியத்தை மார்க்சிஸம் வற்புறுத்துகிறது. தோழர் லெனின் குறிப்பிடுகிறார்:

''ஒடுக்கப்படும் வர்க்கங்களுடைய புரட்சிகள் எல்லாம், இயக்கங்கள் எல்லாம், உலக சோஷலிஸ்ட் இயக்கத்தின் அனுபவம் பூராவும்-நமக்குக் கற்றுக் கொடுக்கும் ஒரு படிப்பினை என்னவென்றால், சுரண்டப் படுகிறவர்களும், உழைப்பாளிகளுமான மக்களில் மிகவும் பிற்போக்கான நிலையில் உள்ளவர்களையும், சிதறிச் சின்னு பின்னப்பட்டுக் கிடப்பவர்களையும் ஒன்று படுத்தி, வழிகாட்டி, முன்னேக்கி நடத்திச்செல்ல தலைமை வகிக்கும் ஆற்றல் தொழிலாளி வர்க்கம் ஒன்றிற்கு மட்டுமே உண்டு.''

சோஷலிஸம் வெறும் லேபல் அல்ல. அது தொழிலாளி வர்க்கத்தின் இலட்சியம்! தொழிலாள வர்க்கத்தின் பதாகை. உலகத்தொழிலாளர்களால் போற்றப்படுவது. சோஷலிஸ சமுதாயத்தை அமைப்பதில் எல்லா வர்க்கங்களுக்கும் நேரடியான ஆர்வம் கிடையாது. தொழிலாளி வர்க்கத்திற்கு மட்டும் தான் அதிக ஆர்வம் உண்டு என்பதுஇவர்களுக்கு விளங்கிக் கொள்ள முடியாத ஒன்றா? ஏற்றத்தாழ்வுக்குக் காரணமான வர்க்கத் தன்மையை, வர்க்க முரண்பாட்டை, வர்க்கப் போராட்டங்களை அவமதிக்கிறவர்கள்-ஒதுக்குபவர்கள், ஏற்றத்தாழ்வை ஒழிப்பது எப்படி? இந்த அடிப்படை உண்மைகளை மறுக்கும் இவர்கள், உண்மையான தொழிலாள வர்க்க நண்பர்களா என்ற கேள்வி நம்முன் எழுகிறது.

உற்பத்தி சக்திகளை தமதாக்கிக்கொண்டு கொள்ளை இலாபம் சம்பாதிப்பதற்கு தொழிலாளர்களின் உழைப்புச் சக்தியை சுரண்டியும், கொள்ளை லாபத்திற்கே சரக்குகளை உற்பத்தி செய்யும் அடிப்படையிலுமே முதலாளித்துவ சமுதாயம் கட்டப்பட்டுள்ளது. இதனை நீடித்துக்கொள்வதற்கு இராணுவ, பொலிஸ், சிறை உள்ளடக்கிய அரசு இயந்திரத்தை ஏற்படுத்திக்கொண்டுள்ளது.

### இணக்கம் சாத்தியமா?

தொழிலாளி வர்க்கமோ முற்றிலும் முரண்பட்ட விதத்தில், வருங்கால சமுதாயம் சோஷலிஸ சமூக அமைப்பாக இருக்கவேண்டும். அங்கு வர்க்கங்கள் இருக்க மாட்டாது. எனவே அங்கு சுரண்டல்முறை ஒழிந்துபோவதுடன், பொருளுற்பத்தி சாதனங்கள் தனிமையுடமையாக இருப்பது முற்றிலும் ஒழிந்துபோகும். எதிர்காலத்தில் பொருள் உற்பத்தியின் நோக்கம் சமூகத் தேவைகளை நேரடியாக நிவர்த்தி செய்வதே தவிர, முதலாளிகளின் கொள்ளை லாபத்தைப் பெருக்குவதற்காக இருக்காது. ஆகையால் முதலாளித்துவ சமூக அமைப்பைக் கட்டிக்காக்கும் இந்த அரசு இயந்திரத்தைப் பொடிப் பொடியாக்கி, தொழிலாளி வர்க்க சர்வாதிகாரம் நிறுவவேண்டும் என்று போராடுகிறது. இத்தனை அடிப்படை முரண்பாடுகளைக் கொண்டு போராடும் தொழிலாள வர்க்கம், எப்படி முதலாளித்துவ அமைப்புடன் இணக்கங்காண முடியும்; உதவமுடியும்?

முதலாளி வர்க்கத்திற்கும் தொழிலாளி வர்க்கத்திற்கும் சமூகத்தில் இடைவிடாது நடந்துவரும்வர்க்கப்போராட்டத்தின் அடிப்படையில் சமூகத்தை மாற்றி அமைக்கப் புரட்சிப் பாதையை, பொது ஜன இயங்கங்கள் போராட்டங்கள் மூலம் உருவாக்க முற்படாமல், முதலாளிகளும் தொழிலாளிகளும் ஒத்துப் போகக்கூடும் என்ற பிரேமையில் மூழ்கி சமரஸப்பாதையை நாடுகிறார்கள்.

### துரோக நடவடிக்கை

இந்தவித வர்க்க சரணகதிக்கான மந்திரிசபை மாற்றங்களுக்கும் ஆள்மாறாட்டங்களுக்கும், தொழிலாளர் அரசு-சோஷலிஸ அமைப்பிற்கும் துளி கூடச்சம்பந்தமில்லை. இவர்கள் ஏற்கெனவே உள்ள முதலாளித்துவ சமூகஅமைப்பு மந்திரிசபையில் இடம் பெறுவது மூலம், தொடர்ந்து அந்தச் சமூக அமைப்பை அப்படியே நீடிக்கவிடுவதற்கும், முதலாளித்துவத்தின் சேவகத்திற்கும், ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பை மறைப்பதற்கும், ஒடுக்கப்படுகின்ற, சுரண்டப்படுகின்ற மக்கள் புரட்சிகர இயக்கத்திற்கு எதிராகப் பயன்படுவதற்கு மட்டும்தான் உதவும். இது வர்க்க சரணகதிக்கு இழுத்துச்செல்லும் ஒரு துரோக நடவடிக்கை.

இந்தப் படுதுரோகப் போக்கிற்கும் தொழிலாள வர்க்க அரசிற்கும் மலைக்கும் மடுவிற்கும் உள்ள வித்தியாசம். தொழிலாள வர்க்க அரசு என்பது வெறும் ஆள் மாறாட்டமோ-மந்திரி சபை மாற்றமோ அல்ல. அது முற்றிலும் புதிய ஒரு அரசின் தோற்றம். அது உடைத்து நொருக்கப்பட்ட முதலாளித்துவ சமூக அமைப்பிலிருந்து உதயமாகும் அரசு, அதன் சாம்பலிலிருந்து உதயமாகும் அரசு.

---

### எமது அனுதாபம்

''பருத்தித்துறை இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்க அங்கத்தவரும், பருத்தித்துறை சி. டி. பி. டிப்போ கமிட்டி உறுப்பினருமான தோழர் சி. வேலுப்பிள்ளை (தவராசா) அவர்களின் அன்னையார் அண்மையில் இறந்த செய்தி கேட்டு நாம் துயருறுகின்றோம். அவருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் எமது அனுதாபம் உரித்தாகுக.''

---

## இலங்கை மாக்சிஸ போதனைக் குழு

அரசியல் பொருளாதாரம் பற்றிய சொற்பொழிவுகள்

| பொருள் | தேதி | நேரம் |
|---|---|---|
| 1 உபரி மதிப்புத் தத்துவம் | 30-6-64 | 5 மணி |
| 2 பொருளாதார நெருக்கடிகளுக்கான காரணம் | 9-7-64 | 5 மணி |
| 3 ஏகாதிபத்திய ஏகபோகத்தின் வளர்ச்சி | 21-7-64 | 5 மணி |
| 4 சோஷலிஸப் பொருளாதாரம் | 30-7-64 | 5 மணி |

இவ்வகுப்புகள் டரட் ரோட்டிலுள்ள செஞ்சிலுவை மண்டபத்தில் நடைபெறும். தற்போது ஆங்கிலத்திலும் சிங்களத்திலுமே வகுப்புக்கள் நடத்தப்படும்.

சொற்பொழிவாளர்:

**நா. சண்முகதாசன்**

குறிப்பு: இவ்வகுப்புக்கள்மார்க்சிஸ போதனைக் குழு அங்கத்தவர்களுக்கு மட்டுமே. இக்குழுவில் சேர விரும்புவோர் உடனடியாக விண்ணப்பிக்கவும்.

ஈ. டி. மூர்த்தி,
பிரான்சிஸ் பெரேரா,
கூட்டுக் காரியதரிசிகள்.

# பாரதமெங்கும் மார்க்சிஸ்ட் - லெனினிஸ்டுகள் கை ஓங்குகிறது!

[இன்று இந்தியாவெங்கும் திரிபுவாத, தொழிலாளர் துரோக டாங்கே கும்பலை எதிர்த்து, உண்மையான மார்க்சிய வழியில் கட்சியினைக் கூட்ட உணர்ச்சி வெள்ளம் திரண்டு வருகிறது. இந்த வளர்ச்சியில் வங்காளம் தன் வீர பரம்பரையை நிலைநாட்ட சூழ்நிலையிலும் முன்னணியில் நிற்கிறது.]

1. 32 தேசியக் கவுன்சில் உறுப்பினர் தீர்மானத்தினை ஆதரிப்போம்.

2. உண்மையான மார்க்ஸிய வழியில் கம்யூனிஸ்ட் கட்சியைக் கட்டுவோம்.

3. பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்.

கடந்த ஏப்ரல் மாதம் 24, 25 தேதிகளில் கூடிய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மேற்கு வங்க மாநில கவுன்ஸில் மேற்கண்ட அறைகூவலை விடுத்துள்ளது.

இந்தச் கவுன்ஸிலில் 102அங்கத்தினர்களுண்டு. இவர்களில் (கண்ட்ரோல் கமிஷன் 3, சிறையிலிருப்பவர் 3, எதிலும் சேராதிருப்பவர் 2, நோய்வாய் பட்டவர் 3) 11 பேர் போக மீதியுள்ள 91 பேரில் எப்பொழுதுமே சராசரி 82 முதல் 84 பேர் கலந்துகொள்ளும் உறுப்பினர்களில் முதல் நாள் 60 பேரும், மறுநாள் 61 பேரும் கலந்துகொண்டனர்.

பெரும்பாலான கவுன்ஸில் உறுப்பினர்கள் பங்குகொண்ட இக்கூட்டத்தினைத்தான் சில முதலாளித்துவப் பத்திரிகைகளும், திரிபுவாதத் தலைமையில் நடக்கும் தமிழ்நாடு ஜனசக்தியும் 35 பேர் என்றும், 40 முதல் 45 பேர்தான் என்றும் அப்பட்டமான—பொய்யான தகவலை வெளியிட்டன.

இந்தப் பத்திரிகைகளுக்கு இவ் விதமான ஆதாரமற்ற செய்தியைக் கொடுத்தவர்களின் நோக்கம் மேற்கு வங்க மாநிலக் கவுன்சில் உண்மையான கம்யூனிஸ்ட் கட்சிக்கு பெரும் ஆதரவு இருப்பது தெரியாமலிருக்க வேண்டுமென்ற கெட்ட நோக்காகும்.

இக் கூட்டத்திற்கு தோழர் முசாபர் அகமது தலைமை வகித்தார். தோழர் பிரேம் தாஸ் குப்தா, தோழர் ஜோதிபாசு அறிக்கைகள் சமர்ப்பித்தனர்.

பின் தேசிய கவுன்ஸிலிலிருந்து வெளியேறிய 32 உறுப்பினர்களின் தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டது. டாங்கே கோஷ்டியின் வர்க்க சமரசக் கொள்கையினையும், காங்கிரஸிற்கு வால்பிடிக்கும் போக்கினையும், மார்க்ஸிஸ துரோகப் பாதையில் கட்சியினை இட்டுச்செல்ல செய்யும் முயற்சியையும் முறியடித்து, உண்மையான பாட்டாளி வர்க்கக் கட்சியாக கம்யூனிஸ்ட் கட்சியினை பரிணமிக்கச் செய்ய இந்த மாநிலம் தழுவிய முறையில் நமது கொள்கையைத் தீவிரமாக பிரச்சாரம் செய்யவும், டாங்கேயின் திரிபுவாதத் தலைமையினை நிராகரிக்கவும் எல்லா கம்யூனிஸ்டுகளையும், கம்யூனிஸ்ட் அனுதாபிகளையும் கேட்டுத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

மேற்கு வங்க மாநிலக் கவுன்சிலின் இத் தீர்மானங்களை ஆதரித்து மாநிலம் தழுவிய பேராதரவு பெருகிவருகிறது.

அவற்றில் சில குறிப்பிட்ட இடங்களை இங்கே குறிப்பிடுகிறோம். ஏப்ரல் 23, 24, 25ந் தேதிகளில் முறையே 1700, 900, 2000 ஹௌரா, 24 பர்க்ஞஸ், கல்கத்தா போன்ற இடங்களில் கட்சி உறுப்பினர்களும், அனுதாபிகளும் கொண்ட கூட்டங்கள் நடந்தன. இக் கூட்டங்களில் தோழர் பி. ராமமூர்த்தி கலந்து கொண்டு கட்சி டாங்கே கோஷ்டியினர் எப்படி சீர்குலைத்து வருகிறார்கள் என்பதனைப் பற்றி விளக்கவுரை ஆற்றினார்.

ஏப்ரல் 26 கல்னு லோக்கல் கமிட்டி உறுப்பினர்களின் கூட்டம் தனது முழு ஆதரவினையும் தந்துள்ளது.

ஏப்ரல் 20, 24 பர்க்னஸ் மாவட்டக் கவுன்ஸில் கூடி தனது முழு ஆதரவினையும் தெரிவித்துள்ளது. இக் கூட்டத்தில் தோழர் நிரேன்ஞன் சன், தோழர் சரோஜ் முகர்ஜி, தோழர் நிரேன்கோஷ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஏப்ரல் 30ஹௌரா மாவட்டக் கவுன்சில் கூடியது. 32

## வங்காளத்தில் திரிபுவாதிகளுக்கு படுதோல்வி

தேசியக் கவுன்சில் உறுப்பினர்களின் தீர்மானம் பற்றிய விவாதம் நடந்தது போது ஒரு உறுப்பினர் வெளிநடப்புச் செய்தார். மற்றவர்கள் இடதுசாரிகளின் தீர்மானங்களை ஏகமனதாக ஆதரித்தார்கள்.

மே 1 கூக்லி மாவட்டக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் தோழரி சாமுக்கர் தீர்மானத்தினை சமர்ப்பித்து விளக்கம் கொடுத்தார். பின் 32 தேசியக்கவுன்ஸில் உறுப்பினர்களின் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மே 5, மிட்னுப்பூர் மாவட்டம். இந்த மாவட்டத்தில் டாங்கே கோஷ்டியினரின் திரிபுவாதத் தலைமைக்கு மெஜாரிட்டியுள்ளது. இங்கு மாவட்டக் குழு செயலாளர் நிர்வாகக் குழுவினையோ கவுன்சிலையோ கலக்காமலும், இடம் நேரம் தெரிவிக்காமலும், ஸ்தாபன அமைப்பு விதிகளுக்குப் புறம்பாக கூட்டத்தினைக் கூட்டினார். இந்த விஷயம் தெரிந்தவுடன் நமது உண்மையான கட்சித் தோழர்கள் 40 பேர் கலந்துகொண்டனர். தங்களின் மார்க்ஸிய வழியின் புரட்சித் தீர்மானங்களை வலியுறுத்தியும் டாங்கேயின் திரிபுவாதப் போக்கினை எதிர்த்தும் பேச முயன்றார்கள். இவர்களது தீர்மானத்தின்மீது பேச அனுமதியளிக்க மறுத்த டாங்கே கும்பலின் செய்கையைக் கண்டித்து வேறு வழியின்றி 40 பேரும் வெளிநடப்பு செய்தனர்.

வெளியேறிய தோழர்கள் எந்தவிதக் கஷ்டப்பட்டும் இந்த மாவட்டத்தில் உண்மையான கம்யூனிஸ்ட் கட்சியைக் கட்டுவோம்; டாங்கேயின் தலைமையை நிராகரிப்போம் என உறுதி பூண்டு வேலை செய்துவருகின்றனர்.

இன்னும் பல கிளைகள் தங்களின் முழு ஆதரவினையும் நல்கியுள்ளன. அவற்றில் சில:

டைமன்ட்ஹார்பர் கிளை, நடகார கிளை, அஸ்தடங்கா கிளை, நகர்டக்ரா கிளை போன்றவைகளாகும்.

தேசியக் கவுன்ஸிலிலிருந்து வெளிநடப்பு செய்த 3 தோழர்களில் பஞ்சாப் மாநிலத்தினைச் சேர்ந்த 4 தோழர்கள் மே 20-ம் தேதி நூர்மகால் என்ற இடத்தில் கூடினார்கள். இதில் இந்த மாநிலம் தழுவிய முறையில் எல்லா மாவட்டங்களிலிருந்தும் முக்கியமான 100-க்கும் அதிகமான தோழர்கள் கலந்துகொண்டனர்.

பஞ்சாப் மாநிலத்தில் மாநிலக் கவுன்சில் உறுப்பினர்கள் பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்ட பிறகு அந்த அவசர நிலைமையை சாக்காகக் கொண்டு மாநிலத் தலைமையினைப் பிடித்துள்ள மல்கோத்ரா, டங், சுதந்திரா, ஆனந் ஆகியோர் நமது புரட்சிகர கட்சியினை காங்கிரஸுக்கு வால் பிடிக்கும் ஸ்தாபனமாக மாற்றியும், கட்சியினை சீர்குலைத்தும், கட்சியினை மார்க்ஸிய வழிக்குப் புறம்பாக செயல்படுத்தவும் தீவிரமாக முயற்சி செய்வதினை வன்மையாகக் கண்டித்துள்ளார்கள்.

இந்த திரிபுவாதத் தலைமை காங்கிரஸுடன் ஐக்கிய முன்னணி அமைக்கவும் வேலை செய்து வருவதினை தெளிவாக்கினார்கள். முதலமைச்சர் கெய்ரோனை பதவியிலிருந்து விலக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கையினையும், சுப்ரீம் கோர்ட் தீர்ப்பினையும் எதிர்த்துப் பகிரங்கமாக அறிக்கைகளை விடக்கூடிய அளவுக்கு 'பாபா குருமுக் சிங்' 'தேசாசிங் சுதந்திரா' போன்றவர்கள் [illegible] வந்துள்ளதினையும் இக்கூட்டம் சுட்டிக் காட்டியுள்ளது.

சமீபத்தில் கெய்ரோனின் வலதுகரம் போன்ற ஹன்ஸ் ராஜ் சர்மாவினை மேல்சபைத் தேர்தலில் முழு ஆதரவு கொடுத்து இந்த திருபுவாதக்கூட்டம் ஆதரித்துள்ளதினையும் அறிவித்தார்கள்.

நகரசபை தேர்தலில் காங்கிரஸுடன் ஐக்கிய முன்னணி என்ற பெயருடன் கெய்ரோன் ஆதரவாளருடன் அமைத்து செயல்பட்டுள்ளதும் தெரிவிக்கப்பட்டது.

'செகேத்ரா' நகரசபையில் 4 இடங்களை கெய்ரோன் ஆதரவாளர்கள் போட்டியில்லாமல் தேர்ந்தெடுக்க உதவி செய்துள்ளதும் உறுப்பினர்கள் கவனத்திற்குக்கொண்டு வரப்பட்டது.

'மகல்வான்' தொகுதியில் நடந்த சட்டசபைத்தேர்தலில் கட்சித் தோழர் 'ஹர் நாம் சிங்' கிற்கு எதிராக கெய்ரோன் ஆதரவாளருக்கு அந்தரங்கமான வேலைசெய்த அவமானகரமான செயலும் அனைவரும் அறியக் கூறப்பட்டது.

இத்தகைய மார்க்ஸிய விரோதப் போக்கில் கட்சியினைக்கொண்டுச்செல்லும் தலைமையினை தடுத்து நிறுத்த கட்சித் தலைமை திருந்துவதற்கு வழி காணவில்லை. ஆகவே கட்சி அணிகளுக்கு இந்த தவறுனப் போக்கினை எடுத்துச் சொல்ல ஆரம்பித்தோம். அணிகளுக்கு சொல்வதன் மூலம் தங்களின் அந்தரங்க திட்டம் தவிடுபொடியாகிவிடும் என்றவுடன் கட்சியினை பிளவுபடுத்தப் பார்க்கிறார்கள், கட்சியின் ஜனநாயக மத்தியத்தினைப் புறக்கணிக்கிறார்கள் என்று முதலைக் கண்ணீர் வடிக்க ஆரம்பிக்கிறார்கள்.

மேலும், திரிபுவாத டாங்கே கோஷ்டியின் மார்க்ஸிய துரோகச் செயலை முறியடித்து, பாட்டாளி வர்க்கத்தின் ஆட்சி அமைத்திட பஞ்சாப் முன்னுதாரணமா செயல்படவேண்டும் என்றும் அக் கூட்டம் கேட்டுள்ளது.

—உதவி ''செங் கொடி''

# யூ. என். பி. யின் போலி நேரு பக்தி!

### ஒரு வார்த்தை

பாரதப் பிரதமர் ஸ்ரீ நேருவிற்கு இறுதி மரியாதை செலுத்த, இலங்கைப் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா விசேஷ விமானத்தில் சென்றபோது, தமக்கு இடம் தரவில்லை எனக்கூறி, டட்லி சேனநாயகாவும், அவரது யூ. என். பியும் பெரும் கலாட்டா பண்ணியது நாடறிந்த விஷயமாகும்.

அண்மையில் எமக்குக் கிட்டியுள்ள செய்தியின்படி, இது பற்றி அவர்கள் ஒவ்வொரு கூட்டத்திலும் பேசப் போகிறார்களாம். இதன் மூலம், ஒரு புறம் இந்தியாவுக்கும் இந்தியப் பிரதமருக்கும் தமக்குமுள்ள ஆதரவைக் காட்டுவதுடன், சுதந்திரக் கட்சி அரசாங்கம் ஜனநாயக விரோத எதேச்சாதிகார சக்தியாக மாறி வருகிறது என்பதை மக்களுக்குக் தெரியப்படுத்தப் போகிறார்களாம்.

இது பற்றி ஏற்கெனவே பிரதமர் ஸ்ரீமாவோ அறிக்கை வெளியிட்டுள்ளார். இதில், திருவாளர் டட்லி சேனநாயகா, விசேஷ விமானத்தில் இந்தியா செல்ல விண்ணப்பிக்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

இரண்டு தரப்பிலும் யார் உண்மை பேசுகிறார்கள் என்பது எனக்குத் தெரியாது. இரண்டு பேருமே பெரும்பாலும் பொய்யே பேசி வருகிறார்கள்! இது ஒரு பக்கம் இருக்கட்டும்.

ஆனால், இங்கு நான் உங்களுக்கு கூறவந்த ஒருவார்த்தை இப் பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட வேறு விஷயமாகும்.

நேருவின் மேல் தமக்குள்ள பக்தியைக் காட்ட டட்லி சேனநாயகா முன்வந்ததைக் கண்ட யூ. என். பி கொழும்பு மேயர் வி. ஏ. சுகததாஸா, தனது நேரு பக்தியையும் காட்டத் துள்ளினார். கொழும்பு புதிய டவுண்ஹாலில் நேரு ஆதரவுக் கூட்டம் போட்டு, அழு அழு என்று அழுதார். கூலிக்கு மாரடிக்கும் 'பிஸினஸ் ஒப்பாரிகளை' யொத்த சிலரை அழைத்து பிரலாபிக்கச் செய்தார். இலங்கையிலுள்ள இந்திய மக்களை ஏமாற்றச் செய்யவேண்டியவையெல்லாம் செய்தார்.

இந்த விஷயத்தில் தனது தலைவர் டட்லியையும் ஓரளவு மிஞ்சிவிட்டவராகவே இருந்தார் சுகததாஸா.

வெளிப் பகட்டுக்கு 'நேரு பக்தசிகாமணி' யாக நடித்து நாடகமாடிய சுகததாஸாவின் இதயத்தில் என்ன இருந்தது? முந்திய வாரங்களில் 'தொழிலாளி' வெளியிட்ட தொழிற் சங்க செய்தி இந்தக் கேள்விக்கு விளக்கமான பதில் தந்தது. ஆம்! தனது பரிபாலனத்திலுள்ள சைக்கிள் தொழிற் சாலையில் வேலை பார்த்த 19 தொழிலாளர்களை நேரு இறந்த தினத்தில் துக்கம் கொண்டாடிய ஒரே காரணத்தால் வேலை நீக்கம் செய்துள்ளார்.

'உள்ளொன்று வைத்து புறமொன்று செய்யும்' இந்த கேடுகெட்ட வேலையை சிலர் யூ. என். பி. தலைமை உருவங்களுக்குக்கூறி விளக்கம் கோரினர். கிடைத்த பதில், ''சுகதாசாவுக்கு இதுபற்றி தெரியாது. அவரது உதவியாளர்களான நிர்வாகஸ்தர்களின் வேலையிது'' என்பதுதான். இது உண்மை என்று பலர் நம்பினர்

ஆனால், இந்த வாரம் வெளிவந்துள்ள செய்தி, இந்த வேலைநீக்கத்திற்கு மேயர் சுகததாசாவே காரணம் என்பது தெள்ளத் தெளிவாகியுள்ளது.

எமது தொழிற்சங்கப் பிரதிநிதிகள் எவ்வளவோ முயன்றும், நேருவுக்கு துக்கம் கொண்டாடி வெளியேற்றப்பட்ட தொழிலாளர்களுக்கு வேலைகிடைக்கவில்லை. சுகததாசாவின் நிர்வாகம் இவர்களுக்கு வேலைதர முடியாது என்று பிடிவாதம் செய்தது.

இந்த பிடிவாதத்தால், இப் பிரச்சினையை தொழில் மந்திரி தொழில் கோர்ட்டுக்கு அனுப்பியுள்ளார்.

யூ. என். பி. கும்பலின் பாமரர்களை ஏமாற்றும் போலி வேஷத்திற்கு இது உதாரணமாகும். 'எவன் தலையிலும் விஷயம் முடியும் வரை, அவர்கள் பேசுவதெல்லாம் சோஷலிஸம்; மக்கள் நலன்!' ஆனால் சொந்த நலனுக்கும், சொத்துக்கும், பணத்திற்கும் ஆபத்து என்றால், மக்கள் நலன் பஞ்சாய் பறந்து விடும். சோஷலிஸம் அவர்களுக்கு செல்லாக் காசாகிவிடும், வேலைநீக்கம் செய்யப்பட்ட ஒரு தொழிலாளி கூறினார், ''காலஞ்சென்ற ஸ்ரீ நேருவே முன்வந்து கூறினாலும், மேயர் சுகததாஸா வேலைநீக்கம் செய்யப்பட்டவர்களை மீண்டும் எடுக்கப்போவதில்லையாம். யூ. என். பியினது ''நேரு பக்தியின் உச்சக்கட்டமிது!''

சாட்டை

# கண்ணியமற்ற டாங்கேயே வெளியேறு

## தோழர் நம்பூதிரிபாத் உரை

கடந்த 5-ந்தேதி சென்னை கோகலேஹாலில் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நடந்த கட்சி உறுப்பினர்கள், அனுதாபிகள் கூட்டத்தில் தோழர் ஈ. எம். எஸ். நம்பூதிரிபாத் பேசும்போது, கீழ்க்கண்டவாறு கூறினார்:-

தோழர்களே! இன்று கம்யூனிஸ்ட் கட்சியில் ஏற்பட்டுள்ள பிளவுக்கு ஆரம்ப கர்த்தாவே திரு. டாங்கேதான் என்பதில் எனக்கு எந்தவித சந்தேகமுமில்லை: நேருவுக்குப்பின் நாட்டிலே எழுந்துள்ள சீர்கேடான நிலைமைகளை பரிசீலித்து சரியான முடிவெடுக்க எங்களை (தேசிய கவுன்ஸிலிலிருந்து விலக்கப்பட்ட 32 பேர்களை) டாங்கே கூப்பிடுகிறார். எங்களைப் பொறுத்தவரை நேருவின் மறைவுக்கு முன்பே, ஏன், கடந்த 17 வருட ஆட்சியின் நடைமுறை காரணமாக இந்நாட்டின் எல்லா பிரச்சினைகளிலும் பெரும் நெருக்கடி ஏற்பட்டு விட்டது.

### ஒரே கொள்கை

நாட்டிலே நடமாடுகிற சுதந்திராச்சாரியாரும், டி,டி. கிருஷ்ணமாச்சாரியாரும் உருவத்தில்தான் வேறே தவிர, நடைமுறைக் கொள்கையில் ஒன்றுதான்: இவர்களை வைத்து ஆட்சி செலுத்திய நேருவின் காலத்திலேயே நமக்கு நெருக்கடி தோன்றி விட்டது. அந்த நெருக்கடி கம்யூனிஸ்ட் கட்சியை பிளவு படுத்தக்கூடிய அளவிற்கும் வந்திருக்கிறது.

கட்சியில் இன்று ஏற்பட்டுள்ள கூர்மையான நெருக்கடியை தீர்த்து உண்மையான கம்யூனிஸ்ட் கட்சியாக பரிணமிக்கச் செய்யவே நாங்கள் நிற்கிறோம்.

இத்தகைய ஒன்றுபட்ட சக்தியாகத் திகழ டாங்கே கோஷ்டியினர்தான் ஆரம்பத்திலிருந்தே பிளவு வேலை செய்து வந்தனர்.

கட்சிக்குள் எத்தனையோ உள் விவகாரங்கள் உண்டு. அவைகளைப் பற்றி விளக்க நான் இப்போது முன்வரவில்லை. ஆனால், ஒன்றைமட்டும் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

### சீர்குலைவு

1962 ஏப்ரலில் கூடிய தேசியக் கவுன்ஸிலில் எல்லா உள் விவகாரங்களையும் பிரதிபலிக்கும்ஒருகூட்டுச்செயற்குழு ஒன்றைத்(9 பேரைக் கொண்டது) தேர்ந்தெடுத்தோம். இந்தக் குழுதன்வேலைகளைச் சரியாகத் தொடங்கு முன்பே எல்லைத் தகராறு காரணமாக நாட்டிலேஒருநெருக்கடிஉண்டானது. இந்த நெருக்கடியைப் பாதுகாத்து அரசாங்கம் கம்யூனிஸ்டுகளின் மீது தொடுத்த அடக்கு முறையைநண்பர்டாங்கே கோஷ்டியினர் சாதகமாக்கிக் கொண்டுகட்சியின் எல்லா மட்டங்களிலும் பல தோழர்களை பழி வாங்கினர். கட்சியினை சீர்குலைக்க பல விதத்திலும் வழிகாட்டினார் டாங்கே.

குறிப்பாக இந்நாட்டில் பிற்போக்கு கும்பலும் முதலாளித்துவ ஏஜெண்டும், ஆட்சியாளரும், என்ன காரணங்களை கம்யூனிஸ்டுகள் மீது கூறினார்களோ, அதே காரணங்களை (அது அப்பட்டமான பொய்யென டாங்கே கூட்டத்திற்கு நன்றாகத் தெரிந்தும்) கம்யூனிஸ்ட்டுகளின் ஒரு பகுதியினர் மீது டாங்கே கோஷ்டியினர் செய்து வந்தனர்.

இத்தகைய திட்டமிட்ட விஷமப் பிரச்சாரம் தோழர் டாங்கேயால் ஆரம்பிக்கப்பட்ட அன்றே கட்சியில் பிளவு வேலை ஆரம்பமாகிவிட்டது.

டாங்கே கோஷ்டியினருக்கு உண்மையில் கட்சியின் ஐக்கியத்தில் கிஞ்சிற்றேனும் அக்கரையிருந்தால் இவ்விதமான அபண்டமான பிரசாரத்தினர் கம்யூனிஸ்டுகளின் ஒரு பகுதி மீது ஆரம்பித்திருக்கமாட்டார்.

இன்று உண்மையான கம்யூனிஸ்டுகள் ஒரு பக்கம் திரண்டு வருவதினைக் கண்ட டாங்கே, நேருவின் மறைவிற்குப் பிறகு ஏற்பட்டுள்ள நிலைமையை வைத்து எங்களை அழைக்கிறார்.

### வேண்டுகோள்

கட்சியின் ஒற்றுமையில் உறுதியாக செயல்பட இருக்கும் நாங்கள் கீழ்க்கண்ட எங்கள் நியாயமான வேண்டுகோளை அவர்களுக்கு அனுப்பியுள்ளோம். அவைகள்:

1) கட்சியில் ஏற்பட்டுள்ள எல்லாவிதமான அபிப்பிராயங்களையும் கீழ் யூனிட்டிலிருந்து மேல் மட்டம்வரை பரிசீலனை செய்து விடுவது.

2) கட்சிக் காங்கிரஸிற்கு முன் அங்கத்தினர்களின் பரிசீலனையை எல்லோரும் எற்றுக்கொள்ளும் ஒரு குழுவின் முடிவிற்கு விடுவது.

3) கடந்த இரண்டு வருடங்களாக கட்சி ஊழியர்கள்மீது எடுக்கப்பட்ட எல்லா நடவடிக்கைகளையும் ரத்து செய்ய வேண்டும்.

4) அடுத்த கட்சிக் காங்கிரஸ்வரை தோழர் டாங்கே செயற் குழுவிலிருந்து விலகி நிற்கவேண்டும். ஏனெனில், டாங்கேமீது தினம் தினம் பல புதுமுறைக் குற்றச்சாட்டுகள் வந்த வண்ணம் இருக்கின்றன. கடிதப் பிரச்சினை, பேட்ரியாட், இப்பொழுது அருணா ஆசப் அலி அறிக்கையில் 'லிங்க்' பத்திரிகையின் ஆரம்ப கர்த்தாவே டாங்கேதான் என்று கூறுகிறார். 'இத்தகைய சூழ்நிலையில் கட்சியின்மீது விஸ்வாசம் இருக்குமானால் டாங்கே செயற்குழுவிலிருந்து விலகியிருப்பது கட்சிக்கும், ஏன்அவருக்கும் நல்லது.

### டாங்கே ஏற்பாரா?

டாங்கே விவகாரங்களை எல்லோரும் ஏகோபித்து ஏற்றுக்கொள்ளும் ஒரு குழுத்தலைமைக்கு விட்டு, அவைகள் பரிசீலனை செய்யப்பட்டு முடிவு எடுக்கப் படுவதற்கு நியாயமானதாக இருக்கும்.

டாங்கே இப்பொழுது விலகுவது ஒரு சில மாதம்தான் உண்மையில் கட்சிக் காங்கிரஸ் டாங்கேயின் பக்கம்தான் நியாயம் உள்ளது என்று முடிவு கட்டுமேயானால், அந்தக் காங்கிரஸ் விதிக்கும் எந்த தண்டனையையும் நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயார். டாங்கேயின் மீது குற்றம் சுமத்தப்பட்டால் கட்சிக் காங்கிரஸ் விதிக்கும் தண்டனையை அவர் ஏற்றுக்கொள்ளத் தயாராகவேண்டும்.

இது ஒன்றுதான் கம்யூனிஸ்ட் கட்சியை ஐக்கியப் படுத்தி செயல்படுவதற்கு ஒரே வழியாகும் என்றார்.

இந்த வேண்டுகோளை டாங்கே கோஷ்டியினர் ஏற்பார்களா, இல்லையா? என்பது இன்னும் சில நாட்களில் தெரிந்துவிடும். பின் நாங்கள் அடுத்த மாதம் ஜூலையில் விஜயவாடாவில் கூடும்போது பரிசீலனை செய்து கட்சியின் ஒற்றுமைக்கு முன் நிற்போம்.

இத்தகைய எங்களது கட்சியின் ஒற்றுமையின் அவசியத்தை உணர்ந்து நியாயமாக விடுக்கப்பட்டுள்ள வேண்டுகோளை, நமது கட்சியின் பரம்பரையினை நிலைநாட்டுவதில் கடுகளவேனும் அவர்களுக்கு விசுவாசமிருந்தால் ஏற்றுக் கொள்வார்கள் என நம்புகிறேன்.

அந்த வேண்டுகோளை அவர்கள் நிராகரித்தால், 7-வது கம்யூனிஸ்ட் கட்சி காங்கிரஸ் ஒரு பக்கம் உண்மையான கம்யூனிஸ்ட் கட்சி காங்கிரஸாகவும், மறுபுறம் டாங்கே காங்கிரஸாகவும் நடப்பது தவிர்க்க முடியாததாகும்.

ஆகவே, தோழர்களே உண்மையான கம்யூனிஸ்ட் கட்சியைக் கட்ட நீங்கள் உங்கள் பூரண ஒத்துழைப்பினை தருமாறு கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்!

கூட்ட ஆரம்பத்தில் கோவை ராமதாஸ் அவர்கள் அமரர் ஜீவாவின் பாடலிலிருந்து 'லெனின்பேரை உச்சரித்தோர் தோழரென்பார், நெறிகடந்து பசப்புவாரேல் பேடியாவார்' என்ற பாட்டினை உருக்கமாகப் பாடினார்.

## திரிபுவாதிகள் துரத்தப்பட்டனர்

உரும்பிராய் கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கம் சென்ற ஞாயிறு கூடியது. கம்யூனிஸ இயக்கத்தினூடே இன்று எழுந்துள்ள திரிபுவாத கொள்கையின் போக்கை அலசி ஆராய்ந்தனர். புனிதமான மார்க்சிஸ லெனினிஸ சித்தாந்தத்தை இழிவுபடுத்தி, சீர்குலைவு வேலைகளில் ஈடுபடும் திரிபுவாதத் தலைவர்களுக்கெதிராகக் கண்டனம் எழுப்பப்பட்டது. திரிபுவாதத்துக்குப் பலியான திரு. க. தவஞானம், திரு. ந. பொன்னையா ஆகிய இருவரையும் கமிட்டி வெளியேற்றியது. கமிட்டிக்கு புதிய புரட்சிகர தலைமை அளிக்கப்பட்டது. தோழர் ந. நடராசா தலைவராகவும், தோழர் ச. சீவரத்தினம் காரியதரிசியாகவும் தெரிவுசெய்யப்பட்டனர். ''மார்க்ஸிஸ லெனினிஸக் கொள்கைகளை திரிபுவாத பிற்போக்கு சக்திகளுக்கு இரையாகவிடாமல் கட்டிக் காப்போம்'' என்று வாலிபர் சங்க தோழர்கள் வீர உறுதி எடுத்தனர்.''

★

● நெடுந்தீவு

## முற்போக்கு வாலிபர் சங்கம் உதயம்

யாழ். பிரசேதத்தில் வாலிபர் இயக்கம் விரிந்துபரந்துவளபுகிறது. இதுவரையில் எமது கருத்துக்கள் பரவாத பல இடங்களிலெல்லாம் வாலிபர் இயக்கம் வேலை செய்து, ஸ்தாபனங்கள் அமைத்து இளைஞர்களை அணிதிரட்டித் தலைமை கொடுத்துவருகிறது. கடந்த வாரம் நெடுந்தீவில் முற்போக்கு வாலிபர் சங்கம் அமைக்கப்பட்டது. தலைவராக தோழர் என். ஐ. திருநாவுக்கரசு அவர்களும் செயலாளராக இளம் கவிஞர் தோழர் செ. மகேந்திரன் அவர்களும் பொருளாளராக தோழர் நா. லட்சுமணராசா அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். 5 பேர்கொண்ட ஒரு கமிட்டியும் தெரிவு செய்யப்பட்டது.

## பி. சி. சி. வேலைநிறுத்தம் முடிவுற்றது

கடந்த சில வாரங்களாக சைக்கிள் தொழிற்சாலை, பி. சி. சி. ஆகியவைகளின் தொழிலாளர்கள் செய்து வந்த வேலைநிறுத்தம் இவ்வாரம் முடிவுற்றது.

தொழில் மந்திரி இவ்விரு வேலைநிறுத்தங்களையும் கட்டாய தொழில் மத்தியஸ்தத்திற்கு விட்டுள்ளார்.

எமது தொழிற் சங்கத்தின் தலைமையில் போராட்டம் நடத்திய இத்தொழிலாளர்கள் கடந்த 8-ந் தேதி வேலைக்குத் திரும்பினர்.

## வறுமை வந்தால் பிரிகின்றார்!

பட்டம் பதவி பெற்றவர் எல்லாம்
பண்புடை யோராய் ஆவாரா?
பள்ளிப் படிப்பு இல்லாத ஏழை
பகுத்தறி வின்றிப் போவானா?
வாழும் நோக்கில் வருபவன் இங்கு
வறுமை வந்தால் பிரிகின்றான்
சூழும் வறுமை வளர்த்திடும் வீணர்
தன்னலச் சேற்றில் விழுகின்றார்.

செல்வி ஏ. எஸ், பௌசியா.

வருகிறது!

கம்யூனிஸ்ட்

மார்க்சிஸ-லெனினிஸ
தத்துவ ஜூன் மாத இதழ்

ஆசிரியர்:
நா. சண்முகதாசன்

கிடைக்குமிடம்:
123, யூனியன் பிளேஸ்,
'கொழும்பு-2

யஷ்பால், பாரதத்தின் தலைசிறந்த முற்போக்கு எழுத்தாளர். பஞ்சாபி மொழியில் எழுதும் இவர், இன்று உலகப் பிரசித்த எழுத்தாளர். சில ஆண்டுகளுக்கு முன்னர் உலக முற்போக்கு வாலிபர் சம்மேளனம் நடத்திய சர்வ தேசிய முற்போக்கு சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்றவர். இக்கட்டுரையில் முற்போக்கு கலை பற்றிய தனது கருத்தை அவர் விளக்கியுள்ளார்.

# முற்போக்குக் கலை

மூலம்: யஷ்பால்

புகழ்பெற்ற கலைஞர் ஒருவருடன் பேசிக்கொண்டிருந்தபோது, கலையின் தத்துவத்தைப்பற்றி அவர் கீழ்க்கண்டபடி விளக்கினுர்:

''யதார்த்த-உண்மையில் பொதிந்திருக்கும் அழகை உணர்ந்து அதனை மலர வைத்து, அதைக் குறிப்பிடுவது எதுவோ, அதுதான் கலை. அந்த அழகு என்பது வாழ்க்கையில் ஏதாவது ஒரு வகையில் மனநிறைவு அளிப்பதாக இருக்கவேண்டும்.''

பம்பாய் நகரில் நீங்கள் எந்த வகையான அழகு-அல்லது மன நிறைவை-வேண்டினும் அதற்காக காசு செலவழிக்க வேண்டியிருக்கும். பம்பாய் நகரின் முன்னே ஆயிரக் கணக்கான மைல்கள் பரந்து கிடக்கிறதே-நீலக்கடல், அது கூட ஒரு பெரிய யதார்த்த-உண்மைதான். என் தொழில் கவனிப்பதற்காக நாள் முழுதும் அலைந்து திரிந்த பிறகு, உழைத்த களைப்போடு இந்த நீள்கடலின் கரையில் உட்கார்ந்திருக்கிறேன்; விரிந்து பரந்து கிடக்கும் இந்த யதார்த்தத்திலிருந்து எனக்கு மன நிறைவு தரக்கூடிய அழகு ஏதேனும் கிடைக்குமா என்று எண்ணமிடுகிறது உள்ளம். கொந்தளிக்கும் அலைகள் கண்ணுக்கெட்டியவரை காட்சி தருகின்றன; கரையிலே வந்து மோதிமோதி அவை நுரைகளை கக்கிவண்ணம் இருக்கின்றன. இதில் அழகைக் காண்பதாக இருந்தால், அவை முத்துக்குவியலைக் கரையிலே சிதறடித்துக் கொண்டிருக்கின்றன என்று கூறலாம். பெரிய கலைஞனுக என்னையே பாவித்துக்கொண்டு நானும் இதேபோன்று எதையாவது திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கலாம். ஆனல், இந்த முறையில் எனக்கு வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கை இல்லாததால், இந்த முத்துச்சிதறலில் எனக்கு எவ்வித அழகும் புலப்படவில்லை.

மேல்வானில் கதிரவன் தீக்கோளம் கடலுக்குள் இறங்குவது தெரிகிறது. சிறுசிறு கருமேகக் கீரல்கள் அந்தத் தீக்கோளத்தைச் சுற்றிக்கொண்டிருக்கின்றன. எவனாவது கலைஞனைப்போல் பாவனை செய்வதாக இருந்தால், மாலையெனும் மங்கையின் முகம் நாணத்தால் சிவந்திருக்கிறது; அவளது நீண்ட கூந்தல் அவளது முகத்தைத் திரையிட்டுள்ளது என்றெல்லாம் அடுக்கிக்கொண்டே போகலாம். ஆனுல் நாணிக் குனிந்துள்ள நங்கையைக் காண்பதாக இருந்தால் அதற்குக்கூட அல்லவா காசு வேண்டியிருக்கிறது! அல்லது அவர்களைக் காணக்கூடிய இடத்தில் அமர்ந்தால் அந்த இடத்திற்குக்கூட காசு தரவேண்டியிருக்குமே! பம்பாயில் நகர வீதிகளில் பல யுவதிகளைக் காண முடிகிறது என்பது என்னவோ உண்மைதான். ஆனுல் அவர்கள், ஒன்று-புடவையை முழங்காலுக்குமேல் வாரிச் சொருகிக்கொண்டு கூடையைத் தலையில் வைத்துக்கொண்டு அவசர அவசரமாக எங்கோ எங்கோ ஓடிக்கொண்டிருக்கிறுர்கள்; அல்லது புடவையும்-பிராக்கும் காற்றிலே பறக்க, பஸ்ஸிலிருந்து குதித்து காரியாலயத்திற்குத் தாமதம் ஆகிவிட்டதே என்று ஓட்டம் ஓட்டமாகப் போய்க்கொண்டிருக்கிறுர்கள். நாணிக் கோணி நின்றுகொண்டிருக்க இவர்களுக்கு நேரமில்லை; அப்படி இருந்தாலும் நாணத்தின் ரேகைககளே முகத்தில் படர முடியாதபடி அவர்கள் முகச் சருமம்தான் வாடி உலர்ந்து கிடக்கிறதே! வயிற்றைக் கழுவிக்கொள்ள-அல்லது மன நிறைவுக்காக-இவர்கள் ஏதாவது ஒரு வேலை செய்வதாக வேண்டியிருக்கிறது. அழகைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருக்க இவர்களுக்கு நேரம் இருக்கும் என்று தோன்றவில்லை. ஆனுல் அதோ, காரில் சொகுசாகப் போய்க்கொண்டிருக்கிறுர்களே சில யுவதிகள், அவர்கள் முகம் 'பளபள'' வென்று நன்ருகத்தான் இருக்கின்றது. அவர்கள் முகத்தை நாணத்தால் சிவக்கச் செய்வது சாத்தியம்தான். ஆனுல் காரிலே குஷியாகச் செல்லும் இந்த யுவதிகள் அல்லது ஸ்ரீமதிகள்தான் நம் போன்ருேர் பக்கம் திரும்பிக் கூடப் பார்ப்பதில்லையே! வாழ்க்கையில் மன நிறைவு பெறுவதற்காக ஒவ்வொரு வரும் ஏதோ கொஞ்சம் உழைக்க நேரிடுகிறது; ஒரு சாதாரண மனிதன் மாத முழுவதும் உழைத்துச் சம்பாதிக்கக்கூடிய பணத்தில் ஒரு புடவை வாங்கிக் கட்டிச் செல்லும் இந்த மங்கைகளும் நிச்சயமாக அதற்காக உழைக்கத்தானே வேண்டும், அல்லவா? ஆனுல் அவர்கள் அப்படி என்ன செய்து கொண்டிருக்கிறுர்கள்? மிகப்பெரிய பணக்கார ஆடவர்களுடன் வசித்துக் கொண்டிருக்கிறுர்கள், அவ்வளவுதானே?

நிற்க; கடற்கரையிலமர்ந்து அந்த அழகில் மன நிறைவு பெறச் சென்ற எனக்கு ஒரு காட்சி தென்படத்தான் செய்தது. வலதுபுறம் சுமார் ஐம்பது கெஜ தூரத்தில் இளம் ஜோடி ஒன்று வந்து கல்லின் மீது உட்கார்ந்து கொண்டது. சிறிது நேரம் புன்சிரிப்பு; பிறகு கொஞ்ச நேரம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தார்கள்; இருவரும் ஒருவரையொருவர் அருகே இழுத்துக்கொண்டார்கள். தோள்கள் முட்டின. முத்தமும் பரிமாறிக்கொண்டார்கள். இந்தக் காட்சி நன்ருக இல்லை என்று நான் சொல்ல முடியுமா? ஆனுல், அந்தத் திக்கிலேயே கண் கொட்டாமல் எப்படிப் பார்த்துக் கொண்டிருக்க முடியும்? எனவே நான் இடதுபுறம் திரும்ப நேர்ந்தது. அங்கே ஒரு பெண் முட்டுக்காலுக்கு மேல் புடவையை வாரிக் கட்டிக்கொண்டு-இடுப்பிலே ஒரு குழந்தையோடு-வந்து சேர்ந்தாள். குழந்தையை ஒரு கல் மேல் உட்கார வைத்துவிட்டு அவள் அழுக்குத் துணிகளைத் துவைக்கத் தொடங்கினுள்.

புகழ்பெற்ற அந்தக் கலைஞரின் விளக்கம் என் நினைவுக்கு வந்தது. இப்பொழுது எனக்கு இடது பக்கத்திலும், வலது பக்கத்திலும் உள்ள யதார்த்த உண்மையில், அழகை உணர்ந்து அதைச் சுட்டிக்காட்ட நான் எந்தக் காட்சியைத்தேர்ந்தெடுப்பது? இதற்குள் பார்வை இன்னும் இடதுபுறமாகவே சென்று அங்கே வலையை இழுத்துக் கொண்டிருந்த செம்படவனின் மீது பதிந்தது. அவனுடைய சின்னக் கட்டுமரம் அருகில் கரையில் கிடந்தது. அவன் தன் பலங்கொண்ட மட்டும் பாரம்மிக்க வலையைக் கடலுக்குள்ளிருந்து வெளியே இழுத்துக்கொண்டிருந்தான். இந்தக் காட்சியெல்லாம் உண்மையாகவேயல்ல; கற்பனையில்தான். நாள் முழுவதும் கட்டுமரத்தில் சென்றுவந்து, அதே களைப்போடு இந்த வலையையும் இழுத்துக்கொண்டிருக்கிருனே, இவனுக்குக் களைப்பு என்பதே என்ன என்று தெரியாதோ? வாழ்க்கைக்காக அவன் இவ்வளவு உழைக்கவேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இதுவும் கண்முன் தோன்றும் ஒரு யதார்த்த காட்சிதானே? இதில் எவ்வளவு அழகை உணர முடிகிறது? சிந்தனை எழத்தான் செய்கிறது-தடுக்கமுடியாதே. நான் புகழ்பெற்ற அந்தக் கலைஞரை கேட்கவிரும்புவதிதுதான். யதார்த்த உண்மையிலிருந்து அழகை அறிந்தாய்ந்து, அதைக் குறிப்பிடுவது ஒன்றுதான் கலையா அல்லது அதன் மூலம் சிந்தனையைத் தூண்டச் செய்வதுங்கூட கலைதானு? சிந்தனையைத் தூண்ட வேண்டும் என்கிற விழிப்பு ஏற்படும்போது இயற்கையாகவே மற்ருெரு கேள்வியும் எழுகிறது-எந்த வகையான சிந்தனையைத் தூண்டுவது? வாழ்க்கையில் உள்ள தடைகள் என்ன? வழி எது? என்றெல்லாம் சிந்திக்கத் தொடங்கிவிட்டால், பிறகு இந்தக் 'கலை' என்னவாக இருக்கும்? முற்போக்குக் கலையாக மாறிவிட்டதா!

தமிழாக்கம்: சீனிவாசன்.

● மக்கள் குரல்

**23-5-64**

தொழிலாளி கடைசி பக்கத்தில் மிகச் சிறந்ததோர் கட்டுரையை 'புதினன்' எழுதியுள்ளார். மிகவும் வரவேற்கப்படவேண்டிய தொன்று. நம் அன்ருட வாழ்க்கையில் எப்படியெல்லாம் சிதைத்து வதைத்து எடுக்கப்படுகின்ருேம்; நடத்தப்படுகின்ருேம்...... ஏழ்மையென்ருல் தாழ்மைதான் என்ற மனப் புகைச்சல்களை வெளிக்காட்டும் சாதனமாய் தொழிலாளி இருக்கவேண்டுமென்பதே என் விருப்பம்.

ஆயினும், கட்டுரையின் கடைசிப் பகுதியை என்னுல் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையிலிருக்கிறேன். காரணம் பொலிஸ், மக்கள் சேவகர்களாக மாற எமது சமுதாய முறை இடம் தராது. மக்கள் சேவகராக விரும்பும் பொலிஸாரையும் எமது சமுதாய முறை வாழவிடாது.

''சுரண்டும் வர்க்கம் பயன்படுத்தும் இயந்திரமே அரசாங்கம். அதன் எடுபிடி சாதனமே பொலிஸ்'' என்பதுதான் மார்க்ஸிய வாதிகள் கண்ணேட்டம். பொலிஸார் எதனைக் காப்பாற்ற உருவாக்கப் பட்டார்கள். தனியுடமையை! மூலதனத்தை!

பொலிசார் எவரைக் காப்பாற்ற முனைகிருர்கள்? சுரண்டுபவர்களை! மூலதனத்தின் உடைமையாளரை!

## புதினன் கட்டுரைக்கு விமர்சனம்

# பொலிஸ் அட்டகாசம்

பொலிஸாரின் கடமைகள் இவ்வாறிருக்க, அவர்களை மக்கள் சேவகர்களாக மாற்ற எந்த அதிகாரியாலும் முடியாது. இந்த முதலாளித்துவ சுரண்டலின் எல்லையை கடந்து மக்களுக்காக சேவை செய்ய முனையும் எந்த நேர்மையான, மனிதாபிமான பொலிஸ் சேவகரையும் சுரண்டல் பெருச்சாளிகள் விட்டு வைக்க மாட்டார்கள். பெரும் அதிகாரிகளின் சினத்துக்கு ஆளாகி அழிந்துபோனவர் சரிதம் பல. மேலிடம் முதல் அடிமட்டம் வரை சுரண்டல் பேர்வழிகள் (அவர்கள் வீட்டுச் சுவாந்தாராகிலும் சரி, கொள்ளை வியாபாரியாகிலும் சரி) பயன்படுத்தும் இயந்திரத்தை ஒரு சில அதிகாரிகளின் மரியாதையால் மாற்ற இயலுமா?

பொலிஸார் மக்கள் சேவகர்களாக எந்தச் சட்டத்தாலும் எந்த அதிகாரியாலும் எப்படிப்பட்ட சீர்திருத்தத்தாலும் மாற்ற இயலாத தொன்று. அப்படி மாற்றக் கூடிய சக்தி மக்கள் கையில் தான் இருக்கின்றது. 'நமது சமுதாய முறையில் அடிப்படை மாற்றம் காண்பது தான் அதற்கு ஒரு வழி' என்பதுதான் என் கொள்கை. பொலிஸ் அட்டகாசம் முடிய வேண்டுமெனில், சுரண்டல்—நசுக்கல் ஒழியவேண்டும். சுரண்டலை நசுக்கலை எதிர்க்கும் மக்கள் படைகள்தோன்ற வேண்டும். தேவையெனில், ஆயுதம் தாங்கி மக்கள் தங்களை பாதுகாத்தல் வேண்டும். அந்நிலையில் பொலிஸ் சேவகர்களில் ஏழையானவர்களும் நேர்மையானவர்களும் (முதலில் அஞ்சினுலும்!) மக்கள் சேவகர்களாக மாறுவார்கள் என்பது திண்ணம். அவர்கட்கு மக்கட் படையும் உதவியளிக்குமென்பது உறுதி.

நமது சமுதாய அமைப்பில் வாடி வதங்கும் ஏழைகளுக்காக போர்க்கொடி உயர்த்தும் எமது ஏட்டில், அன்ருட வாழ்க்கையில் ஏழைகள் படும் அவதியை வெளிப்படுத்துவது அதன் கடமை. அதனை செய்ய முற்பட்ட தோழர் புதினன் பாராட்டுக்குரியவர். அவர் நமது சமுதாயத்தின் நோயை சரியாக புரிந்து விளக்கியுள்ளார். நோயின் மருந்தில்தான் நான் வேற்றுமையை காண்கின்றேன். மற்றைய தோழர்கள் கருத்தை எதிர்பார்க்கும் வேளையில் தோழர் புதினனை மேலும் இக்கடிதம் ஊக்குவிக்குமென்ற எண்ணத்திலேயே இதனை எழுதியுள்ளேன். —ஆறுமுகம்

● 2-ம் பக்கத் தொடர்

மாற்றத்திற்குரிய ஒரு கருவியாக மாற்றி அதைத்திறம்பட இயக்கி, அதன் அமைப்பையும், வழிமுறைகளையும், நடைமுறைகளையும் நவீன முறையில் மாற்றி அமைக்கக் கூடியவகையில் ஒரு புதிய புரட்சிகர, சமூக மாற்றத்தையே மக்கள் விரும்புகிருர்களேயொழிய பழைய சாக்கடை சமுதாயத்திற்கு வாசனைத் திரவியங்களைத் தூவி மணங்கமழ வைப்பதை மக்கள் விரும்பவுமில்லை. அதனுல், பிரச்சினைகள் தீரப்போவதுமில்லை என்பதை புதிய நிதி மந்திரி அவர்கள் உணர்வதற்கு நீண்டகாலம் செல்லாதென்றே நாம் நம்புகிருேம்.

-தாசன்

## பாராளுமன்றம் மூலம்

# மொழிப் பிரச்சினையை தீர்க்க முடியாது

## நெல்லியடியில் சண்முகதாசன் உரை

''சிறுபான்மை மக்களின் மொழிப் பிரச்சினை சரியான முறையில் அணுகப்படாததற்கு, பாராளுமன்றமே முதல் முதல் முக்கிய காரணமாகும். நியாய அநியாயங்களை உணர்ந்தவர்கள் கூட பாராளுமன்றத்தில் ஆசனம் பிடிப்பதற்காகப் பிழையான வகுப்புவாதக் [illegible] க்களைப் பரப்புகின்றனர். சிங்களப் பகுதிகளில் சிங்களப் பாராளுமன்ற அரசியல் வாதிகளும் தமிழ்ப் பகுதிகளில் தஅர வகுப்புவாத தமிழரசு மிழ்சியல் வாதிகளும் பாராளுமன்ற மோகத்தினுல் முறையே இந்திய வம்சா வழியினர் பிரச்சினை, இலங்கைத் தமிழ் மக்கள் பிரச்சினை ஆகியனவற்றைச் சுமுகமாகத் தீர்க்க நடவடிக்கை எடுப்பதில்லை. இப் பிரச்சினைகள்தீர்க்கப்பட்டால் இவர்களின் அரசியல் பாராளுமன்ற ஏமாற்று வியாபாரம் முடிவுக்கு வந்துவிடும் என்பதே இதன் இரகசியம்.''

மேற்கண்டவாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய அமைப்பாளர்தோழர்நா. சண்முகதாசன் நெல்லியடி கம்யூனிஸ்ட் வாலிபர் சங்க ஆதரவில் சென்ற 13-6-64-ல் நடைபெற்ற கூட்டத்தில் உரை நிகழ்த்தும் பொழுது குறிப்பிட்டார். இக் கூட்டத்தில் வடமராட்ச்சிவாலிபர் இயக்க அங்கத்தவர்களும் அனுதாபிகளும் கலந்துகொண்டனர்.

அவர் மேலும் பேசுகையில், ''தொழிலாள வர்க்கத் தலைமையில் உண்மையான சோஷலிஸ அரசாங்கத்தை ஸ்தாபிப்பதன் மூலமே வேலையில்லாத் திண்டாட்டம், மொழிப்பிரச்சினை ஆகியவற்றைத் தீர்த்து சுரண்டலை ஒழித்து மக்களுக்கு நல்வாழ்வு காட்ட முடியும்'' எனக் குறிப்பிட்டார். (ந. நி)

# பாட்டா தொழிலாளர்களின் போராட்ட சங்கற்பம்

## "மிரட்டலுக்கு அஞ்சோம்; போராட்டம் தொடர்வோம்"

இலங்கை பொதுத் தொழிலாளர் சங்கத்தின், ரத்மலானை பாட்டா கிளையின் அங்கத்தினர்கள் ஜூன் மாதம் 3-ம் திகதி தொடக்கம் வாரந் தோறும் குறைந்த அளவு ஸ்திரனமான சம்பளத்தின் அடிப்படையில் வேலைசெய்யும், கொள்கையை செயல்படுத்திக்கொள்வதையும், கம்பனி தொழிலாளர்களின் ஸ்தாபனத்தை சீர்குலைக்கும் கருங்காலித்தனமான நோக்கத்துடனும் செல்லும் அத்தகைய செய்கைகளுக்கு எதிர்ப்பைத் தெரிவிக்கும் முகமாகவும், கடந்த ஜூன் மாதம் 8-ந் திகதி தொடக்கம் தமது வேலையிலிருந்து நீக்கஞ் செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலையைப் பெற்றுத் தருவதற்கு ஒத்துழைப்புக் கொடுக்கும் ரீதியாகவும், தமது கிளையின் சார்பாக சமர்ப்பிக்கப் பட்டிருக்கும் கோரிக்கைகளுக்கு ஆதரவைக்கொடுக்கும் முகமாகவும், முதலாளிகளுக்கும், தொழிலாளர்களுக்குமிடையே எழுந்துள்ள சம்பளம் சம்பந்தமான பேதங்களை நீக்குவதற்காகவும், தமது எதிர்ப்பை தெரிவிக்க 2 மணித்தியால அடையாள வேலை நிறுத்தம் 15-ந் திகதி திங்கட்கிழமை 10 மணி முதல் 12 மணி வரை நடத்தினர்.

அவ் வேலைநிறுத்த வேளையில் போஜன சாலையில் கூடிய தொழிலாளர்கள் தமது எதிர்ப்புகளைத் தெரிவிக்கும் முகமாக மாபெரும் பொதுக்கூட்டத்தை கம்பனிக்குள் நடத்தினர். இக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய கிளை இணைச்செயலாளர் தோழர். கே. டி. பெர்ணுந்து ''மிக வீரத்தோடு போராட்டத்தில் குதித்துள்ள பாட்டா தொழிலாளர்கள் அதிகாரிகளிடம் வேண்டி நிற்பது சம்பளம் உயர்த்த வேண்டும் என்று அல்ல. தற்பொழுது தமக்கு கிடைக்கும் வாரச் சம்பளத்திற்குப்பதில் தினந்தோறும் ஸ்திரச் சம்பளம் வேண்டும் என்றும், அதல்லாது சம்பள உயர்வு கேட்டு அல்ல வென்றும் கூறிய அவர், மேலும், தமது சகோதர தொழிலாளர்களின் வேலை நீக்கத்தைக் கண்டித்து நடைபெறும் இவ்வேலைநிறுத்தப் போராட்டத்தை தடைசெய்யவோ, இத்தகைய போராட்டத்தைக் கருங்காலித்தனம் செய்து சீர்குலைக்கவோ அதிகாரிகள் யோசிப்பார்களேயானுல் அத்தகைய திட்டங்கள் ஒருக்காலும் நிறைவேருது என்பதை அதிகாரிகள் நன்ருகத் தெரிந்து வைத்துள்ளார்கள் என்றும் கூறினர்.

தொடர்ந்து பேசுகையில், வேலை நீக்கம் செய்யப்பட்ட அவ் ஊழியர்களுக்கு திரும்பவும் வேலையைப் பெற்றுக் கொடுக்கும் இவ் வேலைநிறுத்தப் போராட்டத்தை உடனடியாகத் தீர்த்து வைக்கும்படியும் நீண்டதோர் உரை நிகழ்த்திஞர்.

மேற்படிக் கூட்டத்தில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் கொழும்பு மாவட்டக் கிளைச் செயலாளர் தோழர் என். எல். பெரேரா, தேயிலை, ரப்பர், தெங்கு மற்றும் பொது ஊழியர் சங்கத்தின் அமைப்பாளர் தோழர். ஏ. ஜெயசூரியா, கிளையின் காரிய சபை உறுப்பினர், தோழர். கே. ஏ. பெர்ணுந்து, இலங்கை பொதுத் தொழிலாளர் சங்கப் பொதுச் செயலாளர். தோழர் எம். எம். செனவிரத்ன ஆகியோர்களும் உரை நிகழ்த்தினர். கூட்டம் கிளைத் தலைவர் தோழர் சுமனதாஸ தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய சகல தோழர்களும் ''தாங்கள் தற்பொழுது நடத்திக்கொண்டு செல்லும் இத்தகைய கொள்கை ரீதியான போராட்டத்தை உடைக்காது, மேலும் முன்னெடுத்துச் செல்வதற்கும், அது சம்பந்தமாக சரியான போராட்டக் கொள்கையையும், சரியான தலைமையையும் இலங்கை தொழிற் சங்கசம்மேளனத்திலிருந்து பெற்றுக் கொள்வீர்கள்'' என்றும் கூறினுர்கள்.

சங்கத்தின் செயலாளர் தோழர் செனிவிரத்ன பேசும்போது ''வழக்குத் தொடர்வதற்கு கம்பெனி செய்துள்ள தீர்மானத்தை நாம் ஏகமனதாக நிராகரிப்பதுடன், தொடர்ந்து இதே விதமாக இப் போராட்டத்தை இதற்கு மேலும்கொண்டுசெல்வோம்'' என்று கூறிய அவர், ''இவ்விதமாக வேதனம் மாற்றியமைக்கும் கொள்கையை பாட்டா சர்வதேசியக் கொள்கையான தொழிலாளர்களை சுரண்டிக் கொழுக்கும் நீண்ட செய்கையேயாகும். ஆகவே இத்தகைய கொள்கையை மாற்றுவது எப்படியாஞலும், இதற்கு மேலும் இலங்கையில் இவ்விதச் செய்கைக்கு இவ்வதிகாரிகளுக்கு இடம்கொடுக்காது, இத்தகைய போராட்டங்களின் மூலம் ஓர் முடிவுக்குக் கொண்டு செல்வோம்'' என்று கூறிமுடித்தார்.

---

### காகிதத் தொழிற்சாலை தொழிலாளர்களின் கூட்டு இயக்கம்

## டிரக்டர் சபையின் தில்லுமுல்லு

காகிதத் தொழிற்சாலையைச் சேர்ந்த ஐந்து தொழிற் சங்கங்கள் சமர்ப்பித்த 15 அம்சக் கோரிக்கைகளை இட்டுப் பேச்சுவார்த்தை நடத்த தொழிற் சங்கங்களின் கூட்டுக் கமிட்டியை கடந்த வாரம் அழைத்த டைரக்டர்கள் சபை, திடீரென்று தொழிற் சங்கங்களின் கூட்டுக் கமிட்டியுடன் பேச்சுவார்த்தை நடத்த முடியாது என்று மறுத்து, தொழிற் சங்கங்களைத் தனித்தனியே பேச்சுவார்த்தைகளுக்கு வரும்படி அழைத்தது. இதன் விளைவாக ஐந்து தொழிற்சங்கங்களின் கூட்டுக் கமிட்டி பேச்சுவார்த்தை நடத்துவதில் இருந்து வெளியேறியதால், பேச்சுவார்த்தை ஆரம்ப கட்டத்திலேயே முறிவடைய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இந்தத் துரதிருஷ்டவசமான நிலையைத் திட்டமிட்டு உருவாக்கிய டைரக்டர்கள் சபையும் அதன் அடிவருடிகளும் தொழிலாளர்களின் உக்கிரமான ஒரு போராட்டத்தை எதிர்பார்க்க வேண்டிவரும் என்பதில் ஐயம் இல்லை.

15 அம்சக் கோரிக்கைகளில் மிக முக்கியமான கோரிக்கை தொழிற்சாலையின் நிர்வாக ஊழல்களைக் களையவேண்டும் என்பதாகும். இந்தக் கோரிக்கையின் மூலம் டைரக்டர்கள் சபை சந்திக்கிழுபடுவது நிச்சயம் என்பதை அறிந்த டைரக்டர்கள் ஒரு தொழிற் சங்கத்தைச் சேர்ந்த இரண்டு கருங்காலிகளைத் தன்வசமாக்கிக்கொண்டு சுரண்டிப்பார்க்க முயலுகின்றது. இது பாரதூரமான விளைவுகளைக் கொண்டுவரும் என்று எச்சரிக்கை செய்கின்ருேம்.

அங்கீகாரம் அற்ற தொழிற் சங்கம் ஒன்று தொழிற் சங்கக் கூட்டுக் கமிட்டியில் அங்கத்துவம் பெற்றுள்ளது என்று நொண்டிக் காரணம் காட்டும் டைரக்டர்கள் சபை, இதுவரை அந்தத் தொழிற்சங்கத்தின் அங்கத்தினர்கள் சந்தா சேகரிப்பு சம்பந்தமாக ஏன் கண்மூடிக் கொண்டிருந்தது என்பது புதிராகவே இருக்கின்றது.

காகிதத் தொழிற்சாலைத் தொழிலாளர்களின் ஐக்கியத்தை முறியடிக்க முயலும் டைரக்டர்கள் சபையும், சிங்கம்களும், நாதன்களும் வெகு சீக்கிரத்தில் மண் கவ்வுவது உறுதி!

டைரக்டர்கள் சபையில் நம்பிக்கையிழந்த தொழிற் சங்கக் கமிட்டி தொழிலாளர் தங்களது ஒரே உரிமையான 'ஆயுதத்தை'ப் பாவிப்பதற்கு முன்பாக நிர்வாக ஊழல்களையிட்டு பகிரங்க விசாரணை நடத்த விசாரணைக் கமிஷன் ஒன்றை நியமிக்கவேண்டும் என்று கைத்தொழில் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியைக் கேட்பது என முடிவு செய்துள்ளது

பேச்சுவார்த்தை ஆரம்பமாகியவுடன் முறிவடைவதற்குக் காரணமாயிருந்த டைரக்டர்கள் சபையின் கீழ்த்தரமான செயல்களையும், அதிகாரிகளின் அடிவருடிகளான பதவியாசை பிடித்த தொழிலாளத் துரோகிகளையும் தொழிலாளர்களுக்குப் புட்டுக் காட்டும் துண்டுப் பிரசுரக் கணைகள் தொழிற்சாலையை முற்றுகையிடும் என்று தெரிய வருகின்றது.

---

### ● பரந்தன் தொழிலாளர் வேலைநிறுத்தம்

**சி,டி.யூ.எப். முன் முயற்சியால் குற்றப் பத்திரிகை வாபஸ்**

கடந்த மே தினத்தின் போது பரந்தன் ரசாயன தொழிற்சாலையில் தொழிலாளர்களின் கூட்டம் நடைபெற்றது. மூன்று தொழிற் சங்கங்களின் கூட்டு முயற்சியில் நடைபெற்ற இக் கூட்டத்தில், தொழிற்சாலை ஊழியர்கள் பலர் பேசினர்.

இப் பேச்சுக்களில் நிர்வாகத்தினரைத் தாக்கியதாக நிர்வாகத்தினர் மூன்று ஊழியர்களுக்கு எதிராகக் குற்றப் பத்திரிகை சர்ப்பித்தனர். இதை தொழிலாளர்கள் கண்டித்ததுடன், பல கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தம் செய்தனர். குற்றப் பத்திரிகை வாபஸ் பெற வேண்டும் என்பதும், கோரிக்கைகள் தரப்படவேண்டுமென்பதும் தொழிலாளர்களின் கோரிக்கைகளாகும்.

இது சம்பந்தமாக பல முயற்சிகள் எடுக்கப்பட்டும் தோல்வியே ஏற்பட்டன. முடிவில் சி. டி. யூ. எப்பின் முன் முயற்சியினுல் குற்றப் பத்திரிகையை வாபஸ் பெறுவதாகவும், யார் மீதும் எவ்விதக் குற்றமும் சுமத்துவதில்லை என்றும் நிர்வாகத்தினர் ஏற்றுக்கொண்டனர்.

தொழிலாளர்களின் மற்றைய கோரிக்கைகள் பற்றி இவ்வாரம் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுள்ளது.

---

## தொழிலாளர் கோரிக்கைகள் வெல்ல போராடுவோம்

### பருத்தித்துறை பஸ் தொழிலாளர் மத்தியில் முழக்கம்

"எத்தகைய அரசாங்கம் ஏற்பட்டாலும், எவர் அரசாங்க அதிகாரம் பெற்றுலும், தொழிலாளரின் கோரிக்கைகையை வெல்வதற்காக நாம் போராடுவோம். இலங்கை தொழிற் சங்க சம்மேளனம் போராட்டப் பதாகையை உயர்த்திப் பிடித்து தொழிலாள வர்க்கத்தின் பொதுக் கோரிக்கைகள் 21 யும் வென்றெடுக்க இறுதி வரை போராடும். இக் கோரிக்கைகள் 21ல் மோட்டார் தொழிலாளரின் 9 கோரிக்கைகளும் அடங்கி உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.''

இவ்வாறு இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தின் பொதுக் காரியதரிசி தோழர் நா. சண்முகதாசன் பருத்தித்துறை பஸ் டிப்போ தொழிலாளர்களின் இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்க உறுப்பினர்களுக்கு நிகழ்த்திய உரையொன்றில் குறிப்பிட்டார்.

தோழர் கெந்தீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில், சி. டி. யூ. எப். வட மாகாண இ.போ.ச. டிப்போ பிரதிநிதி தோழர் ஆர்.பொன்னையாவும் கலந்துகொண்டார்.

பருத்தித்துறை பஸ் தொழிலாளர்கள் தமது பல்வேறு பிரச்சினைகளையும், கஷ்டங்களையும் சி.டி.யூ.எப். பொதுச் செயலாளருக்கு விளக்கமாகக் கூறினர்.

மேலும், தோழர் சண்முகதாசன் பேசும்போது ''மோட்டார் தொழிலாளர்கள் 1963 ஜனவரி-பெப்ரவரியில் தமது உரிமைகளை வெல்வதற்காகத் தனியாகப் போரிட்டனர், ஆனல், இன்ருே தொழிற் சங்க இயக்கம் இக் கோரிக்கைகளை வென்றெடுக்க ஐக்கியமுற்றுள்ளது'' எனக் கூறினுர்.

(ந. நி.)

---

● 1ம் பக்கத்தொடர்

இதன் மூலம், பிற்போக்குக் கும்பல் பயன் பெற்றுள்ளதுடன், தொழிலாளர் மத்தியிலும், முற்போக்காளர் மத்தியிலும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது. இன்று ஆட்சியாளரினதும், மந்திரியினதும் பலாத்காரத்திற்கும், கொடுமைக்கும் ஆளாகி, வேலைக்குச் செல்லமுடியாமல், வேரஹரை வேலைத்தலத்திற்கு வெளியே நின்று போராடும், நாலாயிரத்திற்குட்பட்ட தொழிலாளர்கள் முன், கூட்டு அரசாங்கத்தில் சேர்ந்துள்ள சமசமாஜத் தலைவர்களுக்கும், சேர முயன்ற கட்சிகளின் தலைவர்களுக்கும் போக முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இத் தலைவர்களின் பரிபாலனத்தில் இயங்கிய மோட்டார் தொழிற் சங்கங்களிலிருந்து நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் இன்று எமது இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கத்தில் அணிதிரண்டு வருகின்றனர்.

தொழிலாளர்களுக்கு வாக்களித்தபடி, இ. போ. ச. தொழிலாளர்களுக்கு உதவியும், ஒத்தாசையும் தர புதிய மந்திரி விரும்பினுல் அதற்கான வாய்ப்பு இன்னும் இருந்தே வருகிறது. எமது மோட்டார் தொழிலாளர் சங்கம் புதிய மந்திரிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ள ஆலோசனைகளை ஏற்று அவர் அவைகளை அமுல்படுத்த முயன்ருல், வாக்களித்த அந்த உதவிகளை மந்திரிக்கு செய்ய முடியும். எமது ஆலோசனைகள் பின்வருமாறு:

1. தொழிற் சங்கங்களின் கூட்டு மண்டலத்தின் மூலம் தொழிலாளர் சங்கங்களுடன் நிதமும் ஐக்கியப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதினுல், பல பிரச்சினைகளை நேசமாகத் தீர்த்து, பஸ் சேவையை சீர் செய்ய முடியும்.

2. தேசியமயக் கொள்கைக்கும், தொழிலாளர்களுக்கு விரோதமாகவுள்ள பிற்போக்கு அதிகாரிகள் அனைவரையும் ஒழித்துக்கட்டுதல்.

3. 1963-ம் ஆண்டு ஜனவரி-பெப்ரவரி மாதங்களில் நடைபெற்ற பஸ் தொழிலாளர்களின் வேலைநிறுத்தத்திற்கு ஆதரவு தந்த காரணத்தால் தண்டனைகளுக்குள்ளான தொழிலாளர்களின் சகல தண்டனைகளும் வாபஸ்பெறவேண்டும்

4. புதிய மந்திரி அங்கம் வகிக்கும் சமசமாஜக் கட்சியின் தலைமையில் இயங்கும் தொழிற் சங்கம் பூரணமாக அங்கீகரித்த, பஸ் தொழிலாளர்களின் மீதமான 8 கோரிக்கைகள் தரப்படல்வேண்டும்.

போராடும் வேரஹெரைத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தத்தை முடிவுக்குக்கொண்டு வரவும், தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவும் புதிய சமசமாஜப் போக்குவரத்து மந்திரி ஆவன செய்வார் என்றுஎதிர்பார்க்கிருேம்.

பதிப்பித்து வெளியிடுபவர்: ஹசன் மொஹிதீன் பக்கீர் மொஹிதீன், 123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2. அச்சிட்டது: 'தொழிலாளி' அச்சகம்9, டிமெல் வீதி, கொழும்பு-2